பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 29, புதன்கிழமை 14.12.2016 கதிர் 39

### கோட்டாபய ஜப்பான் விஜயம்

கொழும்பு, டிசெ. 14

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுக் காலை ஜப்பான் புறப்பட்டுச் சென்றார். அவருடன் எம்.பிக்களான ரோஹித அபேகுணவர்த்தன, உதய கம்மன்பில்ல, நிரோஷன் பிரேமரத்ன ஆகியோரும் அங்குசென்றுள்ளனர். அங்குள்ள இலங்கையர்கள்அவர்களைவரவேற்றனர்.

# மக்களின் நேரடி அனுமதியுடன் வரும் முதலாவது அரசமைப்பு

## அதனால் புரிந்துணர்வுடன் செயற்பட அழைப்பு விடுக்கின்றார் சம்பந்தன்



திருகோணமலை, டிசெம்பர் 14

"இதுவரை காலமும் நாட்டின் எந்த அரசமைப்பும் பொது மக்களின் நேரடிப் பங்களிப்புடன் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இப்போதுதான் முதல் தடவையாக ஓர் அரசமைப்பு நேரடியாக மக்கள் அங்கீகாரத்துடன் நடைமுறைக்கு வரும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. ஆகையால் அம்முயற்சியைக் குழப்பாதீர்கள். நல்லிணக்கத்துடன் அதை நிறைவேற்ற ஒத்துழையுங்கள்."

- இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன். பக்கம் 19 »

## அரசமைப்பைத் தோற்கடிக்க அரசின் 28 எம்.பிக்கள் தயார்!

### தம்முடன் இணைவர் என்கிறது கூட்டு எதிரணி

கொழும்பு, டிசெ.14

புதிய அரசமைப்பு உருவாக்கத்தைத் தோற்கடிப்பதற்காக, நல்லாட்சி அரசிலிருந்து ஐ.தே. கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மேலும் 28 எம்.பிக்கள் கூட்டு எதிரணியுடன் சேர்வதற்கு முடிவு செய்துள்ளனராம்.

பிவித்ரு ஹெல உறுமய வின்தலைவரும்நாடாளுமன்ற பக்கம் 19 »

## கலா ஓயாவில் நீராடிய கடற்படை அதிகாரி பலி!


புத்தளம், டிசெ.14

புத்தளம் முல்குளம் கடற்படை முகாமில் பணியாற்றிய கடற்படை அதிகாரி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என வனாத்துவில்லு பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தானை பாலசூரிய மாவத்தைப் பகுதியைச் சேர்ந்த 42 வயதான ஒருவரே பலியாகியுள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை எளுவன்குளம் பக்கம் 19 »

## புதிய அரசமைப்பின் வடிவம் குறித்து நல்லாட்சி அரசுக்குள்ளேயே குழப்பம்



### பிறகு நல்லிணக்கம் எங்ஙனம் சாத்தியம் என தினேஷ் கேள்வி

கொழும்பு, டிசெ.13

உத்தேசபுதிய அரசமைப்பின் வடிவம் குறித்து நல்லாட்சி அரசின் இருபிரதான கட்சிகளுக்கும் இடையிலேயே குத்து வெட்டும், குழப்பமும் நீடிக்கும்போது நல்லிணக்கம் எவ்வண்ணம் சாத்தியமாகும்?

- இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றார் கூட்டு எதிரணியின் பிரமுகரும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருமான தினேஷ் குணவர்த்தனா எம்.பி. கொழும்பு ஆங்கில நாளிதழ் பக்கம் 19 »

## கோப்பாயில் மக்களை அச்சுறுத்திய அறுவர் நேற்று பொலிஸாரால் கைது

### வாள்கள், மோட்டார் சைக்கிள் மீட்பு

கோப்பாய், டிசெ.14

கோப்பாய் பிரதேசத்தில் வாள்களுடன் ஆறு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுபாஷ் மஞ்சுள காந்தோல தெரிவித்துள்ளார். நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை தாங்கள் நடத்திய திடீர் நடவடிக்கை மூலமே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனவும் அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக பக்கம் 19 »

### அளப்பு அருணாசலம்



அண்ணன் சீனா போனார்...
ஒரு தம்பி அமெரிக்காவுக்கு...
மற்றவர் ஜப்பானுக்கு...
ஒரே உலக வலம்தான் பாருங்கோ..

## அம்பாந்தோட்டை துறைமுக ஊழியர்கள் பணிக்கு வராவிட்டால் வேலை காலி!

### அமைச்சர் அர்ஜுன ரணதுங்க எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.14

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவரும் ஊழியர்கள் பணிக்குத் திரும்பாவிட்டால் அவர்களுக்குப் பதிலாக புதிய ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க எச்சரித்துள்ளார்.

அத்தனகல பிரதேசத்தில் நேற்றையதினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பக்கம் 19 »

## வெடிப்பக கிணற்றுக்குள் இறந்த நாய்: உற்பத்திப் பொருள்கள் அழிக்கப்பட்டன

### வெதுப்பகமும் மூடப்பட்டது -நெல்லியடியில் சம்பவம்

வடமராட்சி, டிசெ.14

நெல்லியடி நகரில் உள்ள வெதுப்பகம் ஒன்றின் கிணற்றுக்குள் நாயொன்று இறந்த நிலையில் காணப்பட்டதால் அந்த வெதுப்பகஉற்பத்திகள் அனைத்தையும் அழித்த சுகாதாரப் பகுதியினர் வெதுப்பகத்தையும் மூடுமாறு பணித்தனர்.

கிணற்றுக்குள் நாய் காணப்பட்ட விடயம் தொடர்பாக கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி சுரேஸ்குமாரின் கவனத் பக்கம் 19 »

## இந்த அரசு பணி நீக்குமானால் மஹிந்த அரசில் மீள் நியமனமாம்!

### இப்படி அவரே உறுதி கூறுகின்றார்

கொழும்பு, டிசெ.14

அம்பாந்தோட்டை துறைமுக ஊழியர்களை 'நல்லாட்சி' அரசாங்கம்சேவையில்இருந்து நீக்கினால், தனது அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் அவர்களை மீண்டும் துறைமுகத்தில் இணைத்துக்கொள்ளும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமது தொழிலை நிரந்தரமாக்குமாறு கோரி 8 ஆவது நாளாகவும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள அம்பாந்தோட்டை துறைமுக ஊழியர் பக்கம் 19 »

## தமிழ் மக்கள் பேரவையுடன் கைகோக்க புலம்பெயர் தமிழ் மக்களுக்கு அழைப்பு

### தனித்து நிற்பதை விட சேர்ந்து குரல் கொடுப்பதே வலிதானது

யாழ்ப்பாணம், டிசெ.14

தமிழினத்தின் எதிர்கால நன்மைகருதிபுலம்பெயர்தமிழ் மக்கள் தமிழ் மக்கள் பேரவையுடன் கைகோத்துச் செயற்பட முன்வரவேண்டும்.

இவ்வாறு தமிழ் மக்கள் பேரவை, புலம்பெயர் தமிழ் மக்களுக்கு, குறிப்பாக, புலம்பெயர் தேசத்தில் உள்ள தமிழ் அமைப்புக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

எமது இனம் எதிர்நோக்கும் சிக்கலான சவால்களை தனி பக்கம் 20 »

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்வீட்டுப் பிரச்சினை சூடு பிடிக்கிறது

# கட்சி என்னை வெளியேற்றினாலும் வேறு கட்சிக்குப் போகவே மாட்டேன்

## *நீதிமன்றையும் நாடமாட்டார் என்கிறார் ஹஸன் அலி*



ஹஸன் அலி

நிந்தவூர், டிசெ. 14

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் தொடர்பிலான விவகாரம் முஸ்லிம் அரசியல் களத்தில் சூடு பிடித்துள்ள நிலையில், முஸ்லிம் காங்கிரஸ் தலைமையுடன் ஒரு வருடகாலமாக முரண்பட்டுள்ள கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசன் அலி தமது நிலைமை குறித்து மனம் திறந்து பேசியுள்ளார்.

நிந்தவூரிலுள்ள தமது இல்லத்துக்கு முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்களை கடந்த திங்கள் பிற்பகல் அழைத்து, கூட்டமொன்றை நடத்தி, தமது உள்ளக் குமுறலை ஹஸன் அலி வெளிப்படுத்தியுள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளரின் கடிதப்படி முஸ்லிம் காங்கிரஸின் இரு செயலாளர்களில் ஒருவரையே பரிந்துரைக்குமாறு காலக்கெடுவுடன் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கட்சியின் செயலாளரா, கட்சியின் செயலாளர் நாயகமா என்பதை தேர்தல்கள் ஆணையகத்துக்கு அறிவித்தாக வேண்டும்.

இந்த நிலையில்தான் கட்சித் தலைமையுடனுள்ள முரண்பாட்டில் தமது பக்க நியாயங்களை இக்கூட்டத்தில் வெளிப்படுத்தியுள்ளார் ஹசன் அலி.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமையுடனான முரண்பாடு, செயலாளர் நாயகம் பதவி தொடர்பிலான அதிகாரக் குறைப்பு, தேர்தல்கள் ஆணையாளரின் அண்மைய கடிதம் மற்றும் கட்சிக்குள் தமக்கு ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பாக இக்கூட்டத்தில் செயலாளர் நாயகம் ஹசன் அலி தெளிவுபடுத்தி உரையாற்றினார்.

கட்சியின் செயலாளர் நாயகம் பதவியை இல்லாமல் செய்து, கட்சியின் உயர்பீடத்திலிருந்து என்னை நீக்கிவிடும் சதி ஒன்று அரங்கேறலாம் எனத் தெரிவித்த ஹசன் அலி,

கட்சிக்குள் மசூரா சபை ஒன்றை அமைத்து, பிரச்சினைகள் தொடர்பில் பேச்சு நடத்தி, அந்த மசூரா சபை முடிவெடுத்தால் நான் விலகிச்செல்லத் தயாராகவுள்ளேன் எனவும் குறிப்பிட்டார்.

செயலாளர் நாயகம் ஹசன் அலி தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்:-

"எனது பதவிக் குறைப்பு மற்றும் புறக்கணிப்புகளுக்கு நான் கட்சிக்கும் தலைமைக்கும் செய்த குற்றம்தான் என்ன?

நான் வன்மம் தீர்க்கவோ, ஏட்டிக்குப் போட்டியாக தலைமைக்குச் சவால் விடவோ இக் கூட்டத்துக்கு உங்களை அழைக்கவில்லை.

எக்குற்றமுமற்ற எனக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சதிகளை தெளிவுபடுத்தி என் மனச் சுமையை உங்களிடம் பகிர்ந்து கொள்ளவே விரும்பினேன்.

**ஆரம்பம்**

பலவிடயங்களில், சமூகம் சார்ந்தும் அநீதிகளுக்கெதிராக மக்களுடன் நான் நின்று உறுதியாகக் குரல் கொடுத்து வந்தமைதான் பிரச்சினைகள் ஆரம்பமாகக் காரணம் ஆகும்.

குறிப்பாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் மக்கள் ஏகோபித்து எடுத்த முடிவுடன் நான் உறுதியாக நின்றேன்.

இன்று இந்த நாட்டில் நல்லாட்சியை மலரச்செய்தவர்கள் தாம் தானென மார்தட்டி தம்பட்டமடிப்போர் சிலர் நம்மிடையே அரசியல் பிரமுகர்களாகவுமுள்ளனர்.

ஆனால் முஸ்லிம் மக்களும் நானும்தான் இதற்குக் காரணம் என்பதை அடித்துக் கூறுவேன்.

**ஈர்ப்பு**

அன்று நம் தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பால் ஈர்க்கப்பட்டு கட்சிக்குள் நுழைந்த நான் அவருடன் இணைந்து கட்சி வளர்ச்சிக்காகவும், மக்கள் நலனுக்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்துள்ளேன்.

நமது முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மாமூல் அரசியல் செய்வதற்கென உருவானதல்ல. ஆயுதக்குழுக்களுடன் ஈர்க்கப்படாது முஸ்லிம் இளைஞர்களைக் காப்பதில் ஜனநாயக ரீதியில் போராடுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் இதுவாகும்.

ஆனால் இன்று கட்சியின் ஆரம்ப நோக்கங்கள் மறந்து அது சோபை இழந்து சொறி நாய் போல்தான் மாறியுள்ளது.

இத்தகைய மாமூல் அரசியல் கட்சியாக, பனர்களில் மட்டும் இயங்கும் கட்சியாக அது மாறியுள்ளமை கவலை தருகின்றது.

இதைவிட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும், ஐக்கிய தேசியக் கட்சியிலும் இணைந்து செயற்படலாமே என்றுதான் கூறத் தோன்றுகின்றது.

**சிலர் குறி**

நான் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேற வேண்டும் அல்லது வெளியேற்றப்பட வேண்டுமென்பதில் சிலர் குறியாகவேயுள்ளனர்.

முஸ்லிம் தேசியம் என்பதற்கு - வரைவிலக்கணமே தெரியாத இவர்களா முஸ்லிம்களின் போராட்டத்தை முன்னெடுக்கப் போகின்றவர்கள்?

கட்சி ஆரம்பித்த காலகட்டங்களில் பல்வேறு சவால்களை, உயிர் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டவர்கள் நாம்.

அன்று பதினாறு ஆயுதக் குழுக்களிருந்த காலகட்டம். அவர்களது துப்பாக்கிக் குண்டுகளுக்கு மத்தியில் முஸ்லிம் தேசியத்துக்காக, இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக போராடினோம்.

இப்படிக் கட்சியை வளர்த்த எம்மைக் கட்சியை விட்டு வெளியேற்ற வேண்டுமென்பதில் எவரெல்லாமோ குறியாக இருந்து சதிவலை விரித்த வண்ணமுள்ளனர்.

**முரண்பாடு**

தலைமை எனது பதவி அதிகாரத்தைத் திட்டமிட்டு குறைத்தால் ஏற்பட்ட முரண்பாடு ஒரு வருடமாக நீடிக்கின்றது.

இதனைச் சமரசம் செய்ய பல குழுக்கள் என்னிடம் வந்தன. ஆனால் வருவார்கள் - பேசுவார்கள் - உடன்பாட்டுடன் செல்வார்கள், பின் திரும்பியே வரமாட்டார்கள் என்ற நிலைமைதான் நீடிக்கின்றது.

இரவுபகலாக இருபக்கத்தையும் மூட்டிவிட முனைந்துள்ளவர்களின் கைங்கரியமே இதில் மேலோங்கி நிற்கின்றது.

கட்சியின் அதிகாரத்தை ஒரு இடத்தில் குவிப்பதற்காக செய்யப்பட்ட யாப்பு மாற்றம்தான் இன்றைய முரண்பாடுகளுக்கு முக்கிய காரணமாகும்.

**18 ஆவது திருத்தம்**

18ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட சமயம் கரையோர மாவட்டத்தை மிக இலேசாகக் கேட்டுப் பெற்றிருக்கலாம்.

இதே போல் பல சந்தர்ப்பங்களில் கிடைத்த வாய்ப்புக்களை பயன்படுத்தாது விட்டு விட்டு வாளாவிருக்கின்றது முஸ்லிம் காங்கிரஸ்.

இவையெல்லாம் மறைந்த தலைவருக்குச்செய்யும்பெரும் துரோகமென்றே கூறவேண்டும்.



ஹக்கீம்

இன்று நாடாளுமன்றம் அரசியல் நிர்ணய சபையாக மாறியுள்ளது. இதில் இனப் பிரச்சினைக்கான தீர்வு - மட்டுமல்ல, சட்டங்களையே மாற்றும் நிலைமை உள்ளது.

ஆனால், முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளுக்கான விடிவு குறித்து எதுவுமே இல்லை.

முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்கள் நிவர்த்தி செய்யப்பட வேண்டிய காலகட்டம் இது. இதனை முஸ்லிம் காங்கிரஸே செய்ய வேண்டுமே தவிர அமைச்சர் ரிஷாத்தையோ, அதாவுல்லாவையோ கேட்க முடியாது.

**அபாண்டம்**

கட்சியின் இரு செயலாளர்கள் தொடர்பில் தேர்தல் ஆணையாளரால் அனுப்பப்பட்ட கடிதத்தை ஊடகங்களுக்கு நானே கசிய விட்டதாக என்மீது குற்றச்சாட்டு கூறப்படுகின்றது.

இது அபாண்டமான குற்றச்சாட்டாகும்.

இன்றுள்ள நிலையில் கட்சிக்குள் எனக்கு எத்தகைய சதிகள், இக்கட்டுக்கள் விளைவிக்கப்பட்டாலும் நீதிமன்றம் சென்று கட்சியை ஒரு போதும் சவாலுக்கு உட்படுத்தமாட்டேன்.

கட்சியிலிருந்து வெளியேறினாலும் வேறு கட்சி எதிலும் நான் இணையப்போவதில்லை. இறைநீதி ஒன்று கிடைக்கும்" - என்றார்.

இக்கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமாக ஹஸன் அலியே தொடர்ந்து இருக்கவேண்டும் என்று ஏகமனதான தீர்மானமும் எடுக்கப்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீடம் இன்று புதன்கிழமை அவசரமாகக் கூடி செயலாளர் விவகாரத்தில் முடிவு எடுக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (150)

---

# 2 இளம் முன்னாள் போராளிகள் அடுத்தடுத்த நாள்களில் மரணம்

முன்னாள் போராளிகள் இருவர் - அதுவும் 26 மற்றும் 28 வயதுடைய இளைஞர்கள் - அடுத்தடுத்து இரண்டு நாட்களில் சுகவீனம் காரணமாக உயிரிழந்தனர் என்று கூறப்படுவது முன்னாள் போராளிகள் மத்தியிலும் அவர்களது குடும்பத்தவர்கள் மத்தியிலும் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

கிளிநொச்சி முரசுமோட்டையைச் சேர்ந்த வசந்தரூபன் (மறைவேந்தன் - வயது 28) என்பவர் ஞாயிறன்றும் - முல்லைத்தீவு, வற்றாப்பளையைச் சேர்ந்த இராசதுரை திக்சன் (வயது 26) திங்களன்றும் -

சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளனர். அவர்களில் ஒருவரின் மரணத்துக்கு சிறுநீரகம் செயலிழப்பே காரணம் என்று கூறப்பட்டுள்ளது.

இருவரும் யுத்தத்தின் முடிவில் கைதாகி புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

---

# ஞானசாரரை எதிர்க்க ஓரணியில் 21 முஸ்லிம் எம்.பிக்கள் இணைவு

கொழும்பு, டிசெ.14

இஸ்லாம் மதத்தை நிந்திக்கும் வகையில் பகிரங்கமாகப் பிர சாரம் செய்து வரும் பொதுபலசேனாவின் செயலாளர் வண. கலகொட அத்த ஞானசார தேர ருக்கு எதிராக விரைந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு 21 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து ஒப்பமிட்டு எழுத்து மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கோரியுள்ளனர்.

முஸ்லிம்களின் நாடாளுமன்ற அமைப்பு என்ற பெயரில் ஏ.எச்.எம்.பௌஸி, கபீர் காஸிம், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், பைஸர் முஸ்தபா, ஏ.எச்.எம். ஹலீம், எம்.எஸ்.அமீரலி, பைஸல் காஸிம், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, எச்.எம்.எம். ஹரீஸ், எம்.ஐ.எம்.மன்சூர், அலி சாகிர் மௌலானா, எம்.அப்துல்லா மஹ்ரூப், எம்.எஸ்.தௌபீக், எம்.எச்.எம்.நவவி, முஜிபுர் ரஹ்மான், எம்.எஸ்.மரிக்கார், கே.கே. மஸ்தான், இம்ரான் மஹ்ரூவ், கிஷாக் ரஹ்மான், எம்.எச்.எம். சல்மான் ஆகியோரே கட்சி வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைந்துள்ளனர். (உ)

---

# கார்த்திகைத் தீபத்தால் கடை தீக்கிரையானது

கிளிநொச்சி, டிசெ.14

கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் உள்ள சில்லறை விற்பனைக் கடை ஒன்றில் நேற்றுப் பிற்பகல் ஏற்றப்பட்ட கார்த்திகைத் தீபம் பொருட்களின் மீது வீழ்ந்ததில் அந்தக் கடை எரிந்து நாசமாகியுள்ளது.

பிரதேசவாசிகள் மற்றும் அயல் கடைக்காரர்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட போதும், கடையின் எண்பது வீதமான பொருட்கள் எரிந்து நாசமாகி உள்ளன எனவும் எவருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

---

# இனி பாடசாலை நிர்வாகம் பாடசாலைச் சபையிடம்!

## *புதிய திட்டம் தயாரிக்கிறார் கல்வி அமைச்சர்*

கொழும்பு, டிசெ.14

ஒவ்வொரு பாடசாலையையும் நிர்வகிப்பதற்கென அந்தப் பாடசாலையை ஒட்டி ஒரு சபை அமைக்கப்படும். அத்தகைய சபைகளை அமைப்பதற்கான திட்டம் தயாராகி வருகின்றது.

- இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றார் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம். கொழும்பில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இத்தகவலை அவர் வெளியிட்டார்.

பாடசாலை வலையமைப்பிற்குள் செயற்படும் கட்டமைப்பு மூலமே பாடசாலைகளை நிர்வகிக்கக் கூடிய விதத்தில் பாடசாலை நிர்வாகத்தைப் பலப்படுத்துகின்ற கல்விச் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இத்தகைய சபைகளை அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. - இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் மேலதிக விவரங்கள் தெரியவரவில்லை. (உ)

## கந்தபுராணச் சொற்பொழிவு

வடமராட்சி,டிசெ.14

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'கந்தபுராணம்' தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இச் சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார். (ஐ-30)

# அமெரிக்கப் படையினருக்கு இலங்கையில் வாழ்விடம்

## 5.7 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய கட்டடம் என அமெரிக்கத் தூதரகம் தகவல்

அமெரிக்கப் படையினர் இலங்கையில் தங்கியிருக்கும் வகையில் பெரிய கட்டடத் தொகுதி ஒன்று அமைக்கப்படவுள்ளதாகத் தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க மரைன் இராணுவத்தினரின் தங்குமிட வசதி, துணைக் கட்டடங்கள் மற்றும் தூதரக ஊழியர்களுக்கு அவசியமான ஏனைய வசதிகளைக் கொண்டுள்ளதாக இது அமையவுள்ளது என்று தூதரகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு அமெரிக்கத் தூதரக அலுவலகத்தால் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

5.7 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது.

இதன் மூலம் தூதரக அலுவலக ஊழியர் சபைக்கு பாதுகாப்பான, நிலையான மற்றும் நவீன அலுவலகத் தொகுதி ஒன்று கிடைக்கவுள்ளது என்று அமெரிக்கத் தூதரகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பு செயல்திறன் கொண்ட கட்டடங்களை இவ்வாறான நாடுகளில் நிர்மாணித்தல் மற்றும் அமெரிக்க வெளியுறவுக் கொள்கைகளை ஈட்டுவதற்காக தங்கள் ஊழியர் சபைக்கு உதவுவதே வெளிநாட்டு கட்டடங்கள் செயற்பாடுகள் பிரிவின் முக்கிய நோக்கமாகும்.

இந்தக் கட்டடம் அமெரிக்க கலாசாரம், உயர்மட்ட அமெரிக்க கட்டடக்கலை, பொறியியல், நீண்ட கால தொழில்நுட்பம், கலை மற்றும் இலக்கிய பிரதிநிதித்துவம் கொண்டு நிர்மாணிக்கப்படுவதாக அமெரிக்கத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# வடக்கின் மீள்குடியேற்றம் தொடர்பாக கொழும்பில் ஜனாதிபதியுடன் சந்திப்பு

## மாவட்ட அரச அதிபர்களுக்கு அழைப்பு

வடக்கின் மீள்குடியேற்றம் தொடர்பில் நாளை வியாழக்கிழமை கொழும்பில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெறவுள்ள விசேட கூட்டத்துக்கு மாவட்ட அரச அதிபர் உள்ளிட்டோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராய்வதற்காக வடக்கின் அரச அதிபர்கள் மற்றும் அதிகாரிகளை ஜனாதிபதி செயலகம் அழைத்துள்ளது.

இந்தச் சந்திப்பில் வடக்கில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றம் மேலும் மீள்குடியேற்றப்பட வேண்டியோர் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

இவ்வாறு இடம்பெறும் கூட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது என்று குறிப்பிடப்பட்டது. இதே வேளை வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள மாவட்டங்களில் அண்மைக் காலத்தில் மீள் குடியேற்றம் உள்ளிட்ட தேவைகளுக்காக அழிக்கப்பட்ட காடுகளின் விவரத்தை தனியாக சமர்ப்பிக்குமாறு மாவட்ட அரச அதிபர்களை ஜனாதிபதி செயலகம் எழுத்து மூலம் கோரியுள்ளது.

வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களிலும் உள்ள காடுகள் வகை தொகை இன்றி அரசியல்வாதிகளின் செல்வாக்குடனும் அதிகாரிகளின் உடந்தையுடனும் அழிக்கப்பட்டுள்ளன.

நிலங்கள் ஆக்கிரமிக்கப்படும் அதேவேளையில் இயற்கை வளம் விற்பனை மூலம் அதிக லாபம் ஈட்டப்படுவது தொடர்பில் தொடர்ந்தும் குரல் எழுப்பப்படுகின்ற போதிலும் இது வரையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புள்ளி விவர பயிற்சி வகுப்பு

தொகை மதிப்பு புள்ளி விவரத் திணைக்களத்தின் விவசாய மற்றும் சுற்றாடல் பிரிவால், விவசாய புள்ளி விவரங்கள் தொடர்பான பயிற்சி வகுப்பு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட புள்ளி விவரவியலாளர் ம.வித்தியானந்தநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விவசாயத் திணைக்கள (விரிவாக்கல்) உத்தியோகத்தர்கள் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களப் பெரும்பாக உத்தியோகத்தர்கள் இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளவுள்ளனர்.

கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள தொகை மதிப்புத் திணைக்களத்தின் விவசாயப் பிரிவு சிரேஷ்ட புள்ளிவிவரவியலாளர் எஸ்.தனபாலசிங்கத்தால் பயிற்சிகள் வழங்கப்பட வுள்ளன. (ஐ-32)

## இலவச கணினிப் பயிற்சி

புலோலி தம்பசிட்டிப் பகுதியில் பாடசாலைக் கல்வியை முடித்து வேலை வாய்ப்புக்காகக் காத்திருக்கும் மாணவர்களுக்கு அடிப்படைக் கணினிப் பயிற்சி ஒன்றை இலவசமாக சர்வதேச தொண்டு நிறுவனமான யோகீசன் அறக்கட்டளை நிறுவனம் கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்துடன் இணைந்து ஆரம்பிக்கவுள்ளது.

க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் ஆங்கிலத்துடன் சித்தி, உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்திபெற்ற 25 வயதுக்குட்பட்டோர் இப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம் .

பயிற்சிக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு பொது உளச்சார்பு போட்டிப் பரீட்சை நடத்தப்படும். பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களுக்கு ஒரு சிறு தொகை ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும். அடிப்படைப் பயிற்சியில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களுக்குத் தொடர்ந்து கணனித் துறையில் உயர் கல்வியை பயிலும் வாய்ப்பு வழங்கப்படும்.

ஆர்வம் உடையோர் என். கண்ணதாசன், அல்வாய் தெற்கு, அல்வாய் என்ற முகவரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-30)

# கண்டி, கொழும்புக்கு மேலதிக சேவைகள் ஆரம்பிக்கப் புதிய பஸ்களை வழங்குங்கள்

## இ.போ.ச. தலைவரிடம் பருத்தித்துறை டிப்போ கோரிக்கை

வடமராட்சி,டிசெ.14

பருத்தித்துறையில் இருந்து கண்டிக்கு புதிய பஸ் சேவையையும் நண்பகல் 12 மணிக்குப் பருத்தித்துறையில் இருந்து கொழும்புக்கு மேலும் ஒரு புதிய பஸ் சேவையையும் ஆரம்பிப்பதற்குத் தேவையான புதிய பஸ்களைத் தந்துதவுமாறு பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ முகாமையாளர் கே. கந்தசாமி இ.போ.சவின் தலைவர் ரமால் சிறிவர்த்தனாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமால் சிறிவர்த்தன பருத்தித்துறை டிப்போவுக்கு விஜயம் செய்து அனைத்துப் பிரிவுகளையும் பார்வையிட்டுக் குறைபாடுகள், தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

அதன் போது டிப்போவின் நிலைவரம், தேவைகள் குறித்து டிப்போ முகாமையாளர், தலைவருக்குத் தெரியப்படுத்தினார்.


"பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவால் தினமும் 40 பஸ் சேவைகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் கொழும்பு, திருகோணமலை, கல்முனை, மூதூர், மன்னார் ஆகிய 18 நீண்ட தூரச் சேவைகள் இடம் பெற்று வருகின்றன.


தற்போது பருத்தித்துறையில் இருந்து கண்டிக்குப் புதிய பஸ் சேவை ஒன்றையும் நண்பகல் 12 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து கொழும்புக்கு மேலும் ஒரு சேவையையும் ஆரம்பிக்குமாறு பிரதேச பயணிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

''சேவையை ஆரம்பிப்பதற்குப் பஸ்கள் பற்றாக்குறையாக உள்ளன.இந்தப் புதிய சேவைகள் ஆரம்பிக்கத் தேவையான பஸ்களை தந்துதவுங்கள்.

''இத்துடன், எமது டிப்போவுக்கு மாதாந்தம் 20 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்து வருகின்றது. 65 பஸ் நடத்துநர்களும் 61 சாரதிகளும் பணியாற்றி வருகின்றனர். 5 வருடங்களுக்கு மேலாக நாளாந்தம் 500 ரூபா சம்பளத்தில் பணியாற்றும் பணியாளர்களும் மற்றும் பதில் கடமைகளை மேற்கொள்ளும் பணியாளர்களும் நிரந்தரமாக்கப்பட வேண்டும்.

"பணியாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற ஊழியர்களின் பிள்ளைகளுக்குத் தகுதி அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.''- என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. (ஐ-30-40)





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 – 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 – 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 – 222 2600

## இந்தியப் போக்கை அப்பட்டமாக அம்பலப்படுத்தும் மேனனின் நூல்

ஏழரை ஆண்டுகளுக்குப் பின்னர் உண்மை தெளிவாக வெளிவரத் தொடங்கி இருக்கின்றது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் மிக மோசமாகத் தீவிரமடைந்த சமயத்தில், நமது பக்கத்து நாடான இந்தியாவும் அதனை அப்போது ஆண்ட காங்கிரஸ் அரசும் என்ன நிலை எடுத்தன என்பதை அக்காலத்தில் அந்நாட்டின் வெளிவிவகாரச் செயலாளராகவும், பின்னர் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும் இருந்த சிவ்சங்கர் மேனன்,இப்போது மெல்லப் போட்டுடைத்திருக்கின்றார்.

யுத்தத்தில் தமிழர் தரப்பின் ஏகத் தலைவராக நின்ற வே.பிரபாகரன் குறித்த அவரது கருத்துக்கள், அவரையும் அவர் சார்ந்த நாட்டையும் பொறுத்தது.

யுத்தம் உச்சக்கட்டத்தை அடைந்தபோது, அதை நிறுத்தவும் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் பாதுகாப்பாக வெளியேறவும் அமெரிக்கா, நோர்வே உள்ளிட்ட மேற்குலகம் எடுத்த முயற்சிகளை இலங்கையுடன் சேர்ந்து இந்தியா எதிர்த்தது என்பதும் கூட அந்த நாட்டின் வெளிவிவகாரக் கொள்கை சார்ந்ததுதான்.

புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டையே எப்போதும் இந்தியா கொண்டிருந்தது என்பதும் வெளிப்படையான யதார்த்தமே. அதனை அந்த நேரத்து இந்தியா வெளிவிவகாரச் செயலாளர்தான் இப்போது வந்து கூறவேண்டும் என்பதல்ல.

ஆனால், அந்தக் கொடூர யுத்த சமயத்தில் இந்தியா வெளிப்படையாக எந்தப் பக்கத்தில் நின்றது - என்ன நிலை எடுத்திருந்தது - என்பது இன்று அம்பலமாகி இருக்கின்றது.

அப்போது இந்தியாவின் வெளிவிவகார அமைச்சராக இருந்தவர் பிரணாப் முகர்ஜி. இப்போது இந்தியாவின் ஜனாதிபதி.

யுத்த காலத்தில் அவர் இரட்டை வேடம் போட்டார் என்றும், யுத்தக் கொடூரத்தில் சிக்கிநின்ற தமிழர்களைப் பாதுகாப்பதற்கு முரணான நிலைப்பாட்டைக் கையாண்டார் என்றும் அப்போதே தமிழர் தரப்பிலிருந்து பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அந்தக் குற்றச்சாட்டுக்களை இப்போது ஒப்புதல் வாக்குமூலம் அளித்து, நிரூபித்திருக்கின்றார் அன்றைய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு, வெளிவிவகாரச் செயலாளராக இருந்த சிவ்சங்கர் மேனன். அவ்வளவுதான்.

யுத்தம் மிக மோசமான கட்டத்தை எட்டியிருந்த 2009 முற்பகுதியில், வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி கொழும்புக்கு வந்தார். அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவையும் ஏனைய இலங்கைத் தலைவர்களையும் சந்தித்தார்.

"யுத்தத்தால் அப்பாவிப் பொதுமக்களுக்குப் பேரழிவு ஏற்பட்டுள்ளது. அதனால், அதனை நிறுத்தி, சமரச மார்க்கங்களை நாடும்படி ஆலோசனை கூறியிருக்கின்றோம்" - என ஒப்புக்கு உபசாரவார்த்தைகளைப் பத்திரிகையாளர்களுக்குக் கூறிவிட்டுப் பறந்தார்.

அப்போதே மூடிய அறைகளுக்குள் இலங்கை அரசுத் தலைவருக்கு "Any cost finish the war" (என்ன நடந்தாலும் யுத்தத்தை நடத்தி முடியுங்கள்) என்று பச்சைக்கொடி காட்டிவிட்டே அவர் சென்றார் என்று கூறப்பட்டது.

அதுமட்டுமல்ல, இந்திய நாடாளுமன்றத்தில் இலங்கை அரசின் செயற்பாட்டை அவர் வலிந்து நியாயப்படுத்தினார்.

'வன்னியில் ஆக எழுபதாயிரம் பொதுமக்களே யுத்தத்துக்கு நடுவில் சிக்குண்டுள்ளனர். அவர்களுக்குப் போதுமான அளவு உணவும், மருந்தும், அத்தியாவசியப் பொருள்களும் அனுப்பப்படுகின்றன' - என்று நாடாளுமன்றத்தில் அவர் அறிவிக்கவும் தவறவில்லை. ஆனால், யுத்தத்தின் பேரழிவின் முடிவில் அந்தப் பிரதேசத்தில் சிக்குண்டு, குற்றுயிரும் குலையுயிருமாகத் தப்பிய மூன்றரை லட்சம் தமிழர்கள் வெளியே வந்தார்கள்.....!

யுதத்தத்தின்போது தமிழர்களின் பேரழிவிலும் விட, விடுதலைப் புலிகளும் அதன் தலைமையும் அழிவதே முக்கியமானது என்று கருதிய கொழும்பின் நிலைப்பாட்டிலேயே, புதுடில்லியும் அச்சமயம் இருந்தது என்பதை சிவ்சங்கர் மேனனின் புத்தகம் மீண்டும் ஒருதரம் நிரூபித்து, உறுதிப்படுத்தி இருக்கின்றது.

புதுடில்லியின் நிலைப்பாட்டுக்குத் தமிழகத் தலைவர்களும் முழு அளவில் ஒத்துழைப்பு நல்கினர் என்ற சாரப்பட அவர் அந்நூலில் குறிப்பிட்டிருக்கின்றமை, அந்தச் சமயத்தில் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசில் தம்மை முழு அங்கமாக இணைத்துக்கொண்டு, போரில் அழிந்த ஈழத்தமிழருக்காக முதலைக் கண்ணீர் விட்ட கலைஞர் கருணாநிதியையும் அவரது தி.மு.க.வையும்கூட, அவர்களின் முகத்திரையைக் கிழித்து அம்பலப்படுத்தியிருக்கின்றது இந்த நூல் என்பது உண்மை.

'ஒப்புக்குச் சப்பாணி' என்பது போல, ஹர்த்தால்கள், ஆர்ப்பாட்டங்கள், தர்ணாக்கள், மனித சங்கிலிப் போராட்டங்கள், உண்ணாவிரத நடிப்புகள் என்று ஈழத்தமிழருக்காக 'கலைஞர் அன் கோ' போட்ட நாடகங்களின் பின்னணியில், பொதிந்து கிடந்த புதுடில்லி ஆதரவு 'ஸ்டண்ட்'டுகளையும் கூட இந்தப் புத்தகத்தின் வரிகளுக்கு இடையில் பொதிந்துகிடக்கும் உண்மைகள் அம்பலப்படுத்தத் தவறவில்லை.

யுத்தம் முடிந்த கையோடு, யுதத்தத்தில் இடம்பெற்ற மனிதப் பேரழிவுகளுக்காக இலங்கையை யுத்தக்குற்ற விசாரணைக் கூண்டில் ஏற்றவேண்டும் என்ற சாரப்பட ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் முன்னால் கொண்டுவரப்பட்ட பிரேரணையைத் தலைகீழாக மாற்றி, தமிழர்கள் மீது தொடுக்கப்பட்ட அந்த அகோர யுத்தத்துக்காக இலங்கையைப் பாராட்டும் தீர்மானமாக நிறைவுசெய்ததன் பின்புலத்தில் முனைப்பாக இந்தியா செயற்பட்டது. அதற்குக் காரணமாக அமைந்த இந்திய மனநிலையை சிவ்சங்கர் மேனனின் நூல் மீண்டும் ஊன்றி உறுதிப்படுத்தி உள்ளது.

# இலங்கை விடயத்தில் வேறுபட்ட கருத்தில் புதுடில்லியும் தமிழ்நாடும் இருக்கவில்லை!

*சிவ்சங்கர் மேனனின் புத்தகத்தில் தெரிவிப்பு*

போரின் இறுதிக்கட்டத்தில் பிரபாகரனைக் காப்பாற்றுவதற்கு அமெரிக்கா, நோர்வே ஆகிய நாடுகள் மேற்கொண்ட முயற்சிகளை இந்தியா தீவிரமாக எதிர்த்தது. இந்திய அரசின் இந்த நிலைப்பாட்டுக்கு தமிழ்நாட்டின் பிரதான அரசியல் தலைமைகள் ஆதரவு அளித்தன என்று இந்தியாவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவில் இறுதிப் போர் நடந்த காலகட்டத்தில் இந்திய வெளிவிவகாரச் செயலராக இருந்த சிவ்சங்கர் மேனன், ஓய்வுபெற்ற பின்னர் எழுதிய Choices: Inside the Making of India's Foreign Policy என்ற நூல் அண்மையில் வெளியாகியுள்ளது.

இந்த நூலிலேயே, தமிழ்நாட்டின் தலைவர்கள் அரசியல் ரீதியாகப் பிளவுபட்டிருந்தாலும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் காப்பாற்றுவதற்கு அமெரிக்கா, நோர்வே எடுத்த முயற்சிகளுக்கு எதிராக இந்தியா எடுத்திருந்த நிலைப்பாட்டுக்கு தனிப்பட்ட முறையில் ஒருமித்த ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் உள்ள தமிழ்த் தலைவர்களை பௌதிக ரீதியாக அழிப்பதன் மூலமே பிரபாகரனால் தமிழீழத்தை அடைய முடியும் என்று தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் அறிந்திருந்தார்கள். சிறிலங்காவில் உள்ள தமிழ்த் தலைவர்கள் அவ்வாறே கொல்லப்பட்டிருந்தார்கள்.

சிறிலங்கா தொடர்பாக தமிழ்நாட்டுக்கும், புதுடில்லிக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் இருப்பதாக வெளியில் தோன்றியிருந்திருந்தாலும், இரண்டு தரப்புகளுமே ஒருமித்த கருத்திலேயே இருந்தன. தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய கட்சிகளுமே இந்த நிலையில்தான் இருந்தன.

அப்போதைய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியினதும், தேசிய பாது காப்பு ஆலோசகர் எம். கே.நாராயணனினதும் கடுமையான உழைப்பின் விளைவே இது. நான் தனியாக சென்னையில் தமிழ்நாட்டின் மூத்த அர சியல் தலைவர்களை இரகசியமாகச் சந்தித்த போது, இதனைக் கண்டு கொண்டேன்.

ராஜீவ்காந்தி கொலைக்குப் பின்னர் விடுதலைப் புலிகள் தொடர்பாக முழு இந்தியாவினதும் அணுகுமுறை ஒரே விதமானதாகவே இருந்தது. அது சிறிலங்கா அரசாங்கத்தையும் ஒரே கோட்டுக்குள் கொண்டு வந்தது.

இந்தியாவின் கொள்கைத் தெரிவுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. வெற்றி பெறும் சிறிலங்கா அதிபர் மஹிந்த ராஜபக்ஷ அதன் பின்னர் இந்தியாவில் தங்கியிருக்கமாட்டார் என்பதையும், இந்தியாவுக்கு குறைந்தளவுக்கே பதிலளிப்பார் என்பதையும் புதுடில்லி நன்கு அறிந்திருந்தது.

இராணுவம் உள்ளிட்ட அதிகாரத்தில் மாத்திரம் ராஜபக்ஷ உறுதியான பிடியைக் கொண்டிருக்கவில்லை. சீனா, பாகிஸ்தான், மற்றும் அமெரிக்காவினது பின்புல ஆதரவும் அவருக்கு இருந்தது.

புலனாய்வு மற்றும் இராணுவப் பயிற்சிகள் விடயத்தில் ராஜபக்ஷவுக்கு உதவ அமெரிக்கா விரும்பியது. ஆனால், மனித உரிமைகள் விடயத்தில் கரிசனைகளை எழுப்பியது.

இந்தியப் பிரதமர் ஒருவரைக் கொலை செய்தவர்களை விட்டு விடுமாறு ராஜபக்ஷ விடம் இந்தியா கேட்டிருந்தால்,அடுத்த பத்தாண்டுகள் அல்லது அதற்கும் அதிகமான காலம் சிறிலங்காவை விட்டு எம்மை நாமே வெளியேற்றியதாக அது அமைந்திருக்கும். சிறிலங்காவில் உள்ள எமது கடல்சார் மற்றும் ஏனைய நலன்களை தியாகம் செய்ய வேண்டியிருந்திருக்கும். புவிசார் அரசியல் மூலோபாய முக்கியத்துவம் கொண்ட அண்டைநாடு ஏனைய சக்தி வாய்ந்த நாடுகளின் கையில் சிக்கியிருக்கும்.

வெற்றியின் விளிம்பில் இருந்த போது மஹிந்த ராஜபக்ஷ மேற்குலகின் போர் நிறுத்த மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர்களை பாதுகாப்பாக வெளியேற்றும் திட்டங்களுக்கு இணங்கத் தயாராக இருக்கவில்லை. பொதுமக்கள் மத்தியில் இழப்பைக் குறைப்பதற்கு அப்போது அதுவே ஒரே வழியாக இருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்காக 200 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டில் நிறைவடைந்த உள்நாட்டு யுத்தத்திற்காக இந்தளவு தொகை செலவிடப்பட்டுள்ளது.இந்த செலவுகளுக்குள் சந்தர்ப்ப செலவு பற்றிய விவரங்கள் உள்ளடக்கப்படவில்லை.

தெற்காசியாவின் மிகவும் வேகமாக அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இலங்கையின் பொருளாதாரம் காணப்பட்டது.

1983ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வ்ரையிலான காலப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் போராளிகள் உள்ளிட்ட இரண்டு தரப்பிலும் 100,000 பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளனர்.

இதில் 30,000 முதல் 50,000 வரையிலானவர்கள் பொது மக்கள். 1155 பேர் இந்திய அமைதி காக்கும் படையினர்.

யுத்தத்தின் பின்னரான இலங்கையின் நல்லிணக்க முனைப்புக்கள் வரவேற்கப்பட வேண்டிய வகையில் அமைந்துள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் யுத்த வெற்றியின் பின்னர் அதனை நல்லிணக்கத்தை நோக்கியோ சமாதானத்தை நோக்கியோ நகர்த்த முயற்சிக்கவில்லை. சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய முனைப்புக் காட்டும் தமிழ்த் தலைவர்களும் அங்கு இருக்கவில்லை. - இவ்வாறு அந்த நூலில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

# போருக்கு வழிகோலும் மத அமைப்புகள் எம் மத்தியில் இருப்பது துரதிஷ்டமே!

துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரணதுங்க தெரிவிப்பு



மீண்டுமொரு போருக்கு வழிகோலும் மதக் குழுக்கள் எம்மிடையே இருப்பது தமது இனத்தின் துரதிஷ்டம் என்று துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

கிராமத்து விகாரையே கிராமத்தின் சக்தி எனும் வேலைத் திட்டத்தின் மூன்றாம் கட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய அரசமைப்பு தொடர்பில் போதிய தெளிவு இல்லாதவர்கள் செய்யும் பிரசாரங்கள் மீளவும் போருக்கு வழியமைக்கும் வகையில் அமைந்துள்ளது.

இனவாத மதவாதத்தைத் தூண்டிய தரப்பினர் மீளவும் ஒருங்கிணையத் தொடங்கியுள்ளனர். அரசமைப்பு பற்றி பல்வேறு யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் எவையும் இறுதியாக்கப்படவில்லை.

அந்தநிலையில் இனவாத மதவாத சக்திகள் போலிப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. இந்த இனவாத சக்திகள் இடையே பௌத்தர்களைப் போன்றே ஏனைய மதத்தவர்களும் இருக் கின்றார்கள்.-என்றார். (எ)

## நாளை

15.12.2016
வியாழக்கிழமை
திதி : துதியை பின்னிரவு 2.50 வரை
நட்சத்திரம்: திருவாதிரை முன்னிரவு 7.50 வரை
சுபநேரம் 07.51 – 09.21
இராகுகாலம் 01.51 – 03.21 வரை

# ஒருதலைப்பட்சமாக ஆளுநர் தீர்த்த காணிப் பிணக்கு மனித உரிமை மீறலே!

## வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் குற்றச்சாட்டு

கடந்த 9 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடத்தப்பட்ட காணிப் பிணக்குகள் மீதான விசாரணை ஒரு தலைப்பட்சமாக நடைபெற்றிருப்பது பாதிக்கப்பட்ட தரப்பினரின் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல்.

கட்டப்பஞ்சாயத்துக்கு ஒப்பான விசாரணைகளை மேற்கொண்டு முடிவுகளை வழங்கி பொதுமக்களின் காணி உரிமைப் பிணக்குகளுடன் விளையாடும் ஒருவர் எமது வடமாகாணத்துக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கின்றமை எமது துர்ப்பேறு.

வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே அண்மைக்காலமாக தனது அதிகார வரம்புகளை மீறி எதேச்சதிகாரமாக நிர்வாக நடவடிக்கைகளில் தலையிட்டு வருகிறார்.

வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை



வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் ஆளுநரால் பொதுமக்களின் காணிப் பிணக்குகள் விசாரணை செய்யப்பட்டு தீர்வுகள் வழங்கப்பட்டன.

இதற்காக இவரால் சிபாரிசு செய்யப்பட்ட பதினாறு பிணக்குகள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு அனுப்பப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த விசாரணைகளின் போது குறித்த காணிப் பிணக்குகள் தொடர்பாக ஆளுநரிடம் முறையிட்ட ஒரு பகுதியினர் மட்டுமே அழைக்கப்பட்டு எதிர்த் தரப்பினர் அழைக்கப்படாத நிலையில் ஒருதலைப்பட்சமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. இது கவலைக்கிடமானதாக உள்ளதுடன் வேதனை தருவதாகவும் அமைகின்றது.

இயற்கை நீதி என்பது பிணக்குக்கு உட்படும் இருபகுதியினரையும் அழைத்து வெளிப்படையாக நீதி நெறிகளின்பால் விசாரணைகளை மேற்கொள்வதாகும். இதைக் கூட பின்பற்றாது ஒருதலைப்பட்சமாக கட்டப்பஞ்சாயத்துக்கு ஒப்பான விசாரணைகளை மேற்கொண்டு முடிவுகளை வழங்கி பொது மக்களின் காணி உரிமைப் பிரச்சினைகளுடன் விளையாடும் ஒருவர் வடக்கு மாகாணத்துக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பது எமது துர்ப்பேறே.

இவ்வாறு ஒருதலைப்பட்சமான விசாரணைகளை மேற்கொள்வது பாதிக்கப்பட்ட தரப்பினரின் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவால் வடக்கு மாகாண மக்களின் காணி தொடர்பான பிரச்சினைகள் இரண்டு வருடங்களில் தீர்க்கப்படவேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டமைக்கு அமைய காணி அமைச்சால் 2013/01 இலக்க சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுநிருபத்தின் படி பிரதேச செயலாளர் ஒருவரால் தீர்த்து வைக்கப் படமுடியாத காணிப் பிணக்குகள் காணி ஆணையாளர் நாயகம், காணி அமைச்சின் செயலாளர் போன்ற உயர் அதிகாரிகளால் நடத்தப்படும் நடமாடும் சேவை ஒன்றின் மூலம் தீர்த்து வைக்கப்படும்.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம், அரச காணிச் சட்டம் போன்ற அரச காணிகளின் நிர்வாகம் தொடர்பான சட்டங்களை நன்கறிந்த அதிகாரிகளால் 2013/01 சுற்றுநிருபப்படி நடமாடும் சேவையில் தீர்வு வழங்கப்பட்டது.

இந்தப் பிணக்குகள் ஆளுநரால் மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு நடமாடும் சேவையில் வழங்கப்பட்ட தீர்மானத்துக்கு முரணான தீர்மானங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது நாட்டின் சட்டம், ஒழுங்கு பேணப்படுவதை கேள்விக்குறியாக்கி இருப்பதுடன் அரச நிர்வாகத்தைக் கேலிக்கூத்தாக்கியுள்ளது.


இதுவரை காலமும் வடக்கு மாகாணத்துக்கு நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் எவரும் பொது மக்களின் காணிப்பிணக்குகளைக் கையிலெடுத்து சட்டத்துக்கு முரணாக நடத்தி தீர்ப்புகளை வழங்கவில்லை.

நல்லாட்சி என்று அடையாளப்படுத்தப்படும் இந்த அரசும் இது தொடர்பில் போதிய கவனம் எடுத்து சட்டத்துக்கு முரணாக வழங்கப்பட்ட இத்தீர்ப்புக் களை மீள்பரிசீலனை செய்யவேண்டும்.

வடமாகாணத்தின் நிர்வாக நடவடிக்கைகளில் இனியாவது வடமாகாண ஆளுநர் எதேச்சதிகாரத்துடன் தலையிட்டு குழப்பங்களை விளைவிக்காது இருக்கவேண்டும்.- என்றார். (ஐ)







ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும், ஈழத் தமிழர்களின் ஆதரவுக் குரலாகவும் ஒலித்து வந்த தமிழகத்தைச் சேர்ந்த கவிஞர் இன்குலாப்பின் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா மற்றும், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண் முகலிங்கன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# அரசிடம் உள்ள நெல்லை இருப்பில் வைக்க முடிவு

## அரிசி விலை அதிகரிப்பை அடுத்து

கொழும்பு, டிசெ.14

அரசிடம் உள்ள ஒரு லட்சத்துக்கு 50 ஆயிரம் மெட்ரிக்தொன் நெல்லை விற்பனை செய்யாது இலங்கை நெற் சபை தீர்மானித்துள்ளது.

அமைச்சரவையால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல் அடிப்படையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது அரிசியின் விலை அதிகரித்து காணப்படுகிறது.

இந்த விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தும் வரையில் களஞ்சியப்படுத்தப் பட்டுள்ள ஒன்றரை லட்சம் மெற்றிக்தொன் நெல்லை விநியோகிக்காதிருக்க அரசு அறிவுறுத்தியுள்ளது.

முன்னதாக இந்த நெல்லை விநியோகிப்பதற்கான விலைக் கோரலை நெற்சபை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கையர் உள்ளிட்ட பணியாளர் கட்டாரில் அடிமை நிலையில்

## சர்வதேச மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ.14

கட்டாரில் இலங்கையர்கள் உள்ளிட்ட வெளிநாட்டுப் பணியாளர்கள் அடிமைகளாக நடத்தப்படுகின்றனர்.

சர்வதேச மன்னிப்புச் சபை இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளது.

கட்டாரில் உலக கிண்ண காற்பந்தாட்டத் தொடருக்கான மைதான நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள இலங்கை உள்ளிட்ட வெளிநாட்டுப் பணியாளர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

உரிய சம்பளம் வழங்கப்படாமல், நேரக் கட்டுப்பாடு இன்றி இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் கடுமையாக அங்கு வேலை வாங்கப்படுகின்றனர் என்று முன்னரே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலை தொடர்ந்தால் 2022 ஆம் ஆண்டு அங்கு உலக கிண்ண தொடர் நடத்துவது தொடர்பில் சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தொழிலாளர்களின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலான புதிய சட்டத் திருத்தங்களை கட்டார் அரசு நடைமுறைப்படுத்தவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இவ்வாறான சட்ட அமுலாக்கத்தின் பின்னரும் தொழிலாளர்கள் கடுமையாக நடத்தப்படக்கூடிய அபாயம் உள்ளது என்று மன்னிப்பு சபை சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## மயிலிட்டி மக்கள் கலந்துரையாடல்

மயிலிட்டித்துறை ஜே/248,ஜே/251 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மயிலிட்டி மக்களுக்கான கலந்துரையாடலும், மயிலிட்டி அபிவிருத்தி நிர்வாகத் தெரிவும் ஆலோசனையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் (எரிஞ்சியம்மன் கோவிலடி, பருத்தித்துறை) நடைபெறவுள்ளது.

இதில் மயிலிட்டி மக்களைக் கலந்து கொள்ளுமாறு மீள்குடியேற்ற குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ-40)

## புதிய பொலிஸ் பொறுப்பதிகாரி



பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக பி.ஆர்.சமன் ஜயலத் பொலிஸ் மா அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கு இரண்டு வருடங்களாகக் கடமையாற்றி வந்த நுவான் பி.டந்த நாராயணா கொழும்புக்கு இடமாற்றலாகி சென்றதையடுத்து மிரிஹான பொலிஸ் நிலையத் தலைமைப்பீட பொலிஸ் பரிசோதகராக கடமையாற்றிய பி.ஆர்.சமன் ஜயலத் என்பவரை பொலிஸ் மா அதிபரின் பணிப்புக்கமைய பருத்தித்துறை தலைமைப்பீட பொலிஸ் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-31)

## வல்லப்பட்டை வெட்டியவர் கைது!

மாத்தறை,டிசெ.14


தெனியாய சிங்கராஜா வனத்தில் வல்லப்பட்டை வெட்டிய சந்தேக நபர் ஒருவரை தெனியாய வன பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது கைது செய்தனர்.

தெனியாய வன பாதுகாப்பு அலுவலக உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்தே சந்தேக நபர் தெனியாய கிரிவல்தொல காட்டுப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் இறக்குவானை பொத்துப்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை எனவும் தெரிய வந்துள்ளது. (ஐ)

# மட்டு.மாவட்டத்தில் மழை இல்லை; வேளாண்மை மோசமாகப் பாதிப்பு!

## பயிர்கள் கருகுவதால் விவசாயிகள் கவலை





மட்டக்களப்பு,டிசெ.14

நாட்டில் நெல் செய்கைக்கான மிகப் பரந்த பிரதேசம் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டம். அங்கு வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை காலமாக இருந்த போதும், கடும் உஷ்ணமான காலநிலையே நிலவுகிறது.

இதனால் மாரி மழையை நம்பி வேளாண்மை செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பயிர்கள் கருகி வருவதைப் பார்த்து கவலை கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் விவசாயிகள் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது மழை பெய்யும் காலம். இருந்த போதிலும் தற்போது வரை மழை பெய்யாத நிலையில் நெற்பயிர்ச் செய்கைகள் உள்ளிட்ட மேட்டு நிலப் பயிர் செய்கைகள் அனைத்தும் கடும்வெயிலில் கருகுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியிலே அதிகளவு வேளாண்மை செய்யப்பட்டுள்ளன. அப்பகுதியின் போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்டுள்ள அதிகளவு நெல்வயல்கள் நீரின்றி முற்றாக கருகிப் போயுள்ளன.-என்றனர்.

இது தொடர்பில் பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தெரிவித்தவை வருமாறு:-

**மண்டூர் கமநல அபி. உத்தியோகத்தர்**

போரதீவுப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட மண்டூர் கமநல நிலையப் பகுதியில் 20 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றில் 5 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்களுக்கு மாத்திரம் நவகிரி வாய்க்காலூடாக நீர் பாய்ச்சப்படுகின்றது. ஏனைய ஆயிரத்து 500 ஏக்கர் நெல் வயல்களும் நீரின்றிக் கருகிக் கொண்டிருக்கின்றன.-என்றார்

**வெல்லாவெளி கமநல அபி.உத்தியோகத்தர்**

வெல்லாவெளி கமநல கேந்திர நிலையத்துக்குட்பட்ட பகுதியில் சுமார் ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் நீரின்றிக் கருகுகின்றன.-என்றார்

**பழுகாமம் கமநல அபி. உத்தியோகத்தர்**


போரதீவுப்பற்றுப் பிரதேசத்திலுள்ள பழுகாமம் கமநல கேந்திர நிலையத்துக்குட்பட்ட பகுதியில் இம்முறை 5 ஆயிரத்து 700 ஏக்கர் வயல் நிலத்தில் வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றுள் 2ஆயிரத்து 600 ஏக்கர் வயல்கள் நீரின்றிக் கருகியுள்ளன.- என்றார்.

இந்த விடயம் தொடர்பில் நவகிரிப் பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.மயூரன் தெரிவிக்கையில்-

நவகிரி நீர்ப்பாசனத்துக்குட்பட்ட 17 ஆயிரத்து 500 ஏக்கர் வயல் நிலங்களுக்கு நவகிரி குளத்து நீர் கடந்த செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதியிலிருந்து வழங்கப்படுகிறது. நவகிரிக் குளத்தில் தற்போதைக்கு இரண்டரை அடி நீர் மட்டம் தான் உள்ளது. - என்றார்

மேலும், மாவட்ட ரீதியில் விவசாயிகள் எதிர்கொண்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் இன்று புதன்கிழமை மாவட்ட ரீதியான மதிப்பீடுகள் பெறப்படவுள்ளன என்று கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட ஆணையாளர் எஸ்.சிவலிங்கம் தெரிவித்தார். (இ-ச)

## யானைத் தாக்குதலில் குடும்பஸ்தர் சாவு!



திருகோணமலை,டிசெ.14

திருகோணமலை பதவிசிறிபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிங்ஹபுர பகுதியில் வயலில் காவலில் ஈடுபட்டிருந்த ஒருவர் யானைத் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பதவிசிறிபுர, சிங்ஹபுரத்தைச் சேர்ந்த பீ. ரோஹன ராஜபக்ஷ (வயது 45) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

காவலுக்குச் சென்ற பிரஸ்தாப நபர், வயலில் வைத்தே தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## தூக்கில் தொங்கிய நிலையில் திருமலையில் கைதியின் சடலம்!

திருகோணமலை,டிசெ.14

திருகோணமலை சிறைச்சாலையில் கைதியொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தம்பலகாமம் தெழுங்குநகர் பகுதியைச் சேர்ந்த கே.பரமேஸ்வரன் (வயது 30) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

சிறைச்சாலையில் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அறைக்குள் தொங்கிய நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது . மரணம் தொடர்பில் விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## புதையல் தோண்ட முயன்ற 9 பேர் கைது!



திருகோணமலை, புல்மோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலந்தைக்குளம் காட்டுப்பகுதியில் புதையல் தோண்ட முயன்ற 9 பேரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் கொழும்பு, இரத்தினபுரி மற்றும் சூரியவெவ பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இந்தக் காட்டுப்பகுதியில் சிலர் புதையல் தோண்ட முயல்கின்றனர் எனப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், அந்த இடத்தைச்சுற்றி வளைத்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச)

## ஏறாவூரில் 81 மில்லி மீற்றர் மோட்டார் குண்டு மீட்பு!



மட்டக்களப்பு,டிசெ.14

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சித்தாண்டிப்பகுதியில் வீட்டு வளவினுள் இருந்து 81 மில்லி மீற்றர் மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை வீட்டு உரிமையாளர் வளவைத் துப்புரவு செய்து கொண்டிருந்த போது இந்தக் குண்டு இருப்பதைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர் .

இதனை அடுத்து குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரின் உதவியுடன் மோட்டார் குண்டு மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## மட்டு.நகரில் கலகம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் இருவருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

மட்டக்களப்பு,டிசெ.14

மட்டக்களப்பில் கலகத்தை ஏற்படுத்துவதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், இருவருக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணியின் உபதலைவர் எஸ்.பூபாலராஜா உட்பட இருவருக்கே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மட்டக்களப்பு நகரில் ஆர்ப்பாட்டமும் பதற்ற நிலைமையும் நிலவியது. இதில் பொதுபலசேனாவின் வருகை தடுத்து நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்ட நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருந்தார் .

இதனைத்தொடர்ந்து குறித்த ஆர்ப்பாட்டத்தைக் கண்டித்து பொதுமக்கள் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் மட்டக்களப்பில் பதற்றமும் அச்சநிலைமையும் ஏற்பட்டன. இந்நிலையில் பொதுமக்களை பிரதான வீதியில் ஒன்று திரட்டி சமாதானத்துக்கு குந்தகம் ஏற்படுத்தும் முறையில் கலகத்தை ஏற்படுத்துவதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலே பிரஸ்தாப நபர்கள் மீது மட்டக்களப்புப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (ச)





*சிறைச்சாலைகள் புனர்வாழ்வு, மறுசீரமைப்பு மற்றும் மீள்குடியேற்ற, இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைக்கப்பட்ட சம்பூர்- நாவலடி 4 கிலோமீற்றர் பிரதான வீதி எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் திறந்து வைத்தார்.*

*நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரெட்ணசிங்கம், கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ, மற்றும் கடற்படைத்தளபதி , மாவட்ட அரச அதிபர் ,மாகாண சபை அமைச்சர்களான சி.தண்டாயுதபாணி, ஆரியவதி கலப்பதி, கே.துரைராஜசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.*

# 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தினால் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை அவசியம்!

## சமூக சேவை வலுவூட்டல் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.14

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தினால் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை தொடர்ந்து வைத்திருப்பது அவசியமாகும் என்று சமூக சேவை வலுவூட்டல் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் தான் தோன்றித்தனமாகச் செயற்படுவதை தடுப்பதற்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையே மிகச் சிறந்த வழி என்றும் அவர் கூறியுள்ளார்.

கண்டி - வாவின்ன பிரதேசத்தில் அமைந்துள்ள விசேட தேவையுடையோர் பயிற்சி நிலையத்துக்கு அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க நேற்று முன்தினம் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

அந்தப் பயிற்சி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள உடற் பயிற்சி பிரிவையும் அமைச்சர் இதன்போது திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வின்போது, அமைச்சரிடம் புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் அதற்கெதிராக எழுந்துள்ள எதிர்ப்பலைகள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

அரசமைப்பு தொடர்பாக குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொது மக்களின் கருத்துக் கணிப்பிற்கு செல்லக்கூடிய எந்தவொரு அரசமைப்புத் திருத்தத்திற்கும் அனுமதிக்க முடியாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

எவ்வாறாயினும் 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக



அமுல்படுத்துவதாயின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை காணப்படுவது அவசியமாகும்.

19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இருந்த படியினால்தான் 13 ஆவது திருத்தத்திற்கு உயர்நீதிமன்றம் அனுமதியளித்ததது.

மாகாண சபைகள் தான் தோன்றித்தனமாக செயற்படுவதை தடுக்கும் ஒரேயொரு முறைதான் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையாகும்.

இதேவேளை அம்பாந்தோட்டையில் கடற்படையினருக்கும், அங்கு பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவரும் துறைமுக ஊழியர்களுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுச் தொடர்பாக சுதந்திரக் கட்சி இன்னும் ஆராயவில்லை.

இலங்கையில் சர்வதேச கப்பல்கள் எங்காவது சிக்கியிருந்தால், அவற்றை மீட்பதற்கு கடற்படை சர்வதேச சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களுக்கு அமைய கடமைப் பட்டுள்ளது.

எனினும், அம்பாந்தோட்டை பணிபகிஷ்கரிப்பாளர்கள் ஊடகவியலாளர்களைப் பலிக்கடாவாக்கி கடற்படையினரை ஆபாச வார்த்தைகளால் திட்டி, தாக்குதல் நடத்தச் சென்றால் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கடற்படை செயற்பட்டிருக்குமானால் அதில் தவறில்லை.

கடற்படைத் தளபதி ஏன் அதில் நேரடியாக தலையிட்டு அவ்வாறு செய்தார் என்பது பற்றி எனக்குத் தெரியாது.

எவ்வாறாயினும் தகவல் அறியும் சட்டத்தின்படி ஊடகவியலாளர்களைப் புறக்கணிப்பது, தாக்குவது அனுமதிக்க முடியாது.

ஆனால் பகிஷ்கரிப்பாளர்களின் பலிகடாவாக ஊடகவியலாளர்கள் செயற்படுவதையும் அனுமதிக்க முடியாது.

மிகப்பெரிய மோதலைக் கடற்படைத் தளபதி சென்று தடுத்துவிட்டதாகவே நான் நினைக்கின்றேன். - என்று தெரிவித்துள்ளார்.

# மீண்டும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டால் தனியார் பஸ்கள் அரசுடைமையாகலாம்!

## சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.14

தனியார் பஸ் உரிமையாளர்கள் மீண்டும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டால் அவர்களது பஸ்கள் அனைத்தும் அரசுடைமையாக்கப்பட வேண்டும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

பேருவளை பிரதேசத்தில நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

போக்குவரத்து ஒழுக்க விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக வரவு- செலவு திட்டத்தில் முன்மொழியப்பட்ட 2 ஆயிரத்து 500 ரூபா அபராத தொகையை நீக்குமாறு தெரிவித்து மீண்டும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடப்போகிறோம் என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் இவ்வாறு மீண்டும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டால் 3 தினங்களின் பின்னர் அவர்களது பஸ் அனுமதிப் பத்திரங்களைத் தடைசெய்து, புதிய விண்ணப்பதாரிகளுக்கு வழங்கவேண்டும் அல்லது சகல தனியார் பஸ்களையும் அரசுடைமையாக்க வேண்டும்.

பிரதான பாதையில் போக்குவரத்து சட்டத்தை மீறி செயற்படும் வாகனச் சாரதிகளுக்கு எதிராக வரவு- செலவு திட்டத்தில் முன்மொழியப்பட்ட 2 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் கட்டாயமாக அமுல்படுத்தப்படவேண்டும்.

நான் எதனையும் மறைத்தோ வேறுயாரிலும் மறைந்து இருந்துகொண்டோ பேசமாட்டேன்.

அத்துடன், போதையுடன் மற்றும் சாரதி அனுமதி பத்திரம் இல்லாமல் வாகனங்களை செலுத்துதல் மோசமான வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.- என்றும் தெரிவித்துள்ளார்.

# சென்னை - இலங்கை விமான சேவை நேற்று முதல் வழமை நிலைக்கு!

கொழும்பு, டிசெ.14

வர்தா சூறாவளி காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த சென்னை - கொழும்புக்கு இடையிலான விமான சேவை நேற்று முதல் வழமைக்குத் திரும்பியுள்ளது.

இந்தியாவின் சென்னை விமான நிலையம் உட்பட அப்பிரதேசத்தின் பல பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள மோசமான காலநிலை மாற்றத்தினால், இலங்கையிலிருந்து சென்னை வரை பயணிக்கவிருந்த விமானங்கள் அனைத்தும் இடைநிறுத்தப் பட்டிருந்தன.

எனினும், சென்னைக்கான விமான சேவைகள் நேற்று முற்பகல் ஆரம்பமாகியுள்ளது என கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் முகாமைப்பிரிவு அறிவித்துள்ளது.

வர்தா சூறாவளி காரணமாக சென்னை - கொழும்புக்கு இடையிலான விமான சேவை



கள் நேற்று முன்தினம் இடைநிறுத்தப்பட்டிருந்ததோடு, சென்னைக்கு செல்லும் சில சர்வதேச விமானங்களும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கம் செய்யப்பட்டன.

வர்தா புயல் நேற்று முன்தினம் மாலை சென்னை நகருக்குள் மீண்டும் பிரவேசித்துள்ளதாக தெரிவிக்கப்படும் தகவலையடுத்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

எனினும் நேற்று முற்பகல் நிலைமை சீரடைந்ததை அடுத்து விமான சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.நா.வின் புதிய பொதுச் செயலராகப் பதவியேற்றார் அன்ரனியோ குரெரெஸ்

நியூயோர்க், டிசெ.14

புதிய ஐ.நா. பொதுச் செயலராக, போர்த்துக்கல் நாட்டின் முன்னாள் பிரதமர் அன்ரனியோ குரெரெஸ் (வயது 67) நேற்று முன்தினம் முறைப்படி பதவியேற்றுக் கொண்டார். இவர் ஐ.நாவின் ஒன்பதாவது பொதுச்செயலராவார்.

கடந்த பத்தாண்டுகளாக ஐ.நா. பொதுச்செயலராக இருக்கும் பான் கீ மூனின் பதவிக்காலம், எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையிலேயே, புதிய ஐ.நா. பொதுச்செயலராக அன்ரனியோ குரெரெஸ் பதவியேற்றார்.

எனினும், இவர் தனது பணிகளை எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதியே ஆரம்பிப்பார்.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் நேற்று முன்தினம் இட்பெற்ற நிகழ்வில், ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்ட நிகழ்வில் புதிய



ஐ.நா. பொதுச்செயலர் பதவி ஏற்றார்.

ஏழு பெண்கள் உள்ளிட்ட 12 பேர் ஐ.நா. பொதுச்செயலர் பதவிக்குப் போட்டியிட்ட போதிலும், கடந்த ஒக்ரோபர் மாதம் அன்ரனியோ குரெரெஸ்



ஐ.நா. பாதுகாப்புச் சபை மற்றும் பொதுச்சபையினால் ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு வரை போர்த்துக்கல் நாட்டின் பிரதமராகப் பதவிவகித்த அன்ரனியோ குரெரெஸ், கடந்த 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை, அகதிகளுக்கான ஐ.நா உயர் ஆணையராகவும் பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓமந்தை புதுக்குளம் முருகன் ஆலயத்தில் ஐம்பொன் முருகவேல், சிலைகள் திருட்டு

வவுனியா, டிசெ.14

வவுனியா, ஓமந்தை, ஆறுமுகத்தான் புதுக்குளம் பகுதியில் அமைந்துள்ள முருகன் ஆலயத்தில் திருடர்கள் தமது கைவரிசை காட்டியுள்ளனர் என்று ஓமந்தைப் பொலிஸார்தெரிவித்தனர்.


நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் ஆலய பூஜைக்காக ஆலயக் குருக்கள் ஆலயத்துக்குச்சென்றபோதே ஆலயம் உடைக்கப்பட்டு திருடப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து ஓமந்தைப் பொலிஸாருக்கு ஆலய நிர்வாகத்தால் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வவுனியா, ஓமந்தை, ஆறுமுகத்தான் புதுக்குளம் பகுதியில் உள்ள முருகன் ஆலயம் பழைமை வாய்ந்தது. ஆறுமுகத்தான் புதுக்குளத்தைச் சூழவுள்ள சேமமடு, மாளிகை, அலைகல்லுப் போட்ட குளம், பன்றிக் கெய்தகுளம் என 15 இற்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வழிபட்டு வரும் ஒரு ஆலயம் ஆகும்.

1954 ஆம் ஆண்டில் முதல் கட்டுமானவேலைகள் இடம்பெற்ற நிலையில் காட்சி அளித்த ஆலயத்தின் மதில் வழியாக உள் நுழைந்த திருடர்கள் வலது புறமாக உள்ள கதவை உடைத்து ஆலயத்தின்மூலஸ்தானத்தில் இருந்த ஐம்பொன்







முருகவேல், ஆலயத்தில் இருந்த வள்ளி, தெய்வானை சிலைகள் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர். ஆலய உண்டியலும் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணமும் திருடப்பட்டுள்ளது.

செப்பில் செய்யப்பட்டிருந்த வைரவர் சிலை உடைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை இரவு வவுனியா, இறம்பைக் குளம் பகுதியில் அந்தோனியார் சிலை ஒன்றும் விஷமிகளால் உடைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-100)

## முல்லை. மீனவர் நேற்று முதல் தொழிலுக்கு!

முல்லைத் தீவு, டிசெ.14

முல்லைத்தீவு மீனவர்கள் நேற்று வழமை போல் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த சில நாள்களாக 'வர்தா' புயலின் தாக்கம் காரணமாக மீனவர்கள் கடற் றொழிலில் ஈடுபட முடியாமல் இருந்தனர். இதன் காரணமாக நாளாந்தம் கடற்றொழில் செய்து, குடும்பத்தின் வாழ்வாதாரங்களைச் சீர் செய்யும் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.



'வர்தா' புயல் தாக்கத்தால் 4 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான குடும்பங்கள் முல்லைத்தீவில் பாதிக்கப்பட்டுள்ளன என்றுமாவட்டகடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா தெரிவித்துள்ளார். (ஐ)

## பொலிஸ் நடமாடும் சேவையின் நிறைவு நிகழ்வு








இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பொலிஸ்மா அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க நாடளாவிய ரீதியில் சமூக பொலிஸ் நடமாடும் சேவைகள் இடம்பெற்று வந்தன.

மாங்குளம் பொலிஸ் நிலையத்தால் நடத்தப்பட்ட சமூக பொலிஸ் நடமாடும் சேவையின் நிறைவு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுவினருக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. இசை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ஐ-81)

## கசிப்பு உற்பத்தியாளர் பொலிஸாரால் கைது



வவுனியா, டிசெ.14

வவுனியா - நெளுக்குளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த ஒருவரை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ். அத்தநாயக்க தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேடுதல் முயற்சியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் டிஸ்கோ சந்தி மற்றும் தம்பனைப் புளியங்குளம் சந்தி காட்டுப்பகுதிக்குள் கசிப்பு தயாரிப்பில் ஈடுபட்ட 39 வயதுடைய ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

மது தயாரிப்புக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் மீட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் வவுனியா மாவட்ட நீதி வான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தவுள்ளனர் என்று நெளுக்குளம் பொலிஸார் கூறினார். (ஐ)

## பாசிக்குடாவுக்குச் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகம்

என்றும் இல்லாதவாறு தற்போது மன்னார் பாசிக்குடாவில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பாடசாலை விடுமுறை காலமாகவும் இவ்வாரத்தில் தொடர்ச்சியாக விடுமுறை தினங்கள் வந்த நிலையிலும் அதிகமாக சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, பாசிக்குடாவுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து காணப்படுகின்றது என்றும் பிரதேச வாசிகள் குறிப்பிட்டுள்ளனர்.



பாசிக்குடாவில் நில பகுதியை நோக்கி சிறியளவில் கடல் நீர் உள் வந்த நிலையில் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள பொலிஸார் சுற்றுலாப் பயணிகளைக் கடலில் இறங்கி நீராட அனுமதியளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலையால் தற்போது பல இடங்களில் கடல் சார் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் சுற்றுலா வரும் பயணிகளை அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸ் மற்றும் படையினர் அறிவுறுத்தி வருகின்றனர் (ஐ)

# ஈழத்தமிழ் ஊடகவியலாளர் நினைவேந்தல் லண்டனில்







ஈழத்தமிழ் ஊடகவியலாளர்கள் நினைவேந்தல் நிகழ்ச்சியில் இளம் ஊடகவியலாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

லண்டனைத் தலைமையகமாகக்கொண்டு இயங்கும் சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஈழத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களை நினைவு கூரும் முகமாக நினைவேந்தல் நிகழ்வு ஒன்றைச் சர்வதேச மனிதவுரிமைகள் தினமான டிசெம்பர் 10ஆம் திகதி நடத்தியது.

வடமேற்கு லண்டன் பகுதியில் அமைந்திருக்கும் St.Alphage திருச்சபை மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் ஊடகவியலாளர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர். கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான மலர் வணக்கத்துடன் ஆரம்பமான இந்நிகழ்ச்சியில் வரவேற்புரையை ஐ.பி.சி. வானொலிப்பிரிவின் இணைப்பாளர் சதீசன் சத்தியமூர்த்தி நிகழ்த்தினார்.

அவர் உரையாற்றுகையில், இளம் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறிப்பிட்டதுடன் அவர்களுக்கும் மூத்த ஊடகவியலாளர்களுக்கும் இடையிலான இடைவெளி பற்றியும் விவரித்தார்.

ஒன்றியத்தின் செயற்குழு உறுப்பினர் திருமதி. சுகி கோபி தலைமையுரை ஆற்றினார்.

நிகழ்ச்சியின் இறுதியில், பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் மக்களுக்குச் சரியான தகவல்கள் சென்றடைய வேண்டும் என்ற அவாவுடன் துணிவோடும், அர்ப்பணிப்போடும் தாயகத்திலிருந்து ஊடகப்பணியாற்றி வரும் ஏழு இளம் ஊடகவியலாளர்களுக்கு, அவர்களை மாண்பேற்றும் வகையில் விருதுகள் வழங்கப்பட்டன. விருது வழங்கும் நிகழ்வை ஒன்றியத்தின் செயற் குழு உறுப்பினர் சேந்தன் செல்வராஜா தொகுத்தளித்ததுடன் விருது பெறும் ஊடகவியலாளர்கள் பற்றிய குறிப்பையும் வெளியிட்டார்.

இவ்வாண்டுக்கான சிறப்பு விருது அண்மையில் காலமாகிய கருத்தோவியர் அல்பேர்ட் அஸ்வின் சுதர்சனுக்கு வழங்கப்பட்டது.


விருதுகள் பெற்றோர் விவரம் வருமாறு:-

சிறிஞானேஸ்வரன் இராமநாதன் (ஆசிரியர், 'மலை முரசு' பத்திரிகை, திருகோணமலை), செல்வராஜா இராஜசேகர் (ஆசிரியர், 'மாற்றம்', வெகுசன ஊடகவியலாளர் தளம்), கமலநாதன் கம்சனன் (பத்திரிகையாளர்), ஜெயராஜா துரைராஜா (ஜெரா) (ஆவணப்பட இயக்குநர், கட்டுரையாளர்), உதயராசா சாளின் (சுயாதீன ஊடகவியலாளர்), ஆறுமுகராசா சபேஸ்வரன் (செய்தியாளர் மற்றும் உதவி ஆசிரியர், யாழ் தினக்குரல்), விக்னேஸ்வரன் கஜீபன் (காணொலி செய்தியாளர்)

ஒன்றியத்தின் பொருளாளர் வேல் த்ர்மாவின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுபெற்றது. (ஐ)

## தேசத்தின் குரல் பாலாவின் நினைவு நாளில் ஆய்வரங்கு

### லண்டனில் இன்று நடத்த ஏற்பாடு




தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் பத்தாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு லண்டனில் இன்று புதன்கிழமை அரசறிவியல் ஆய்வரங்கம் நடத்தப்படவுள்ளது.

பிரித்தானியாவில் செயற்படும் அரசியல் செயற்பாட்டாளர்கள், மூத்த போராட்டவாதிகள், ஊடகவியலாளர்கள், அரசியல் விமர்சகர்கள், பன்னாட்டு விவகார அரசறிவியலாளர்கள் ஆகியோர் இணைந்து இந்த ஆய்வரங்கத்தை நடத்தவுள்ளனர்.

'மாறிவரும் உலக ஒழுங்கில் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம்: வாய்ப்புக்களும், சவால்களும்' என்ற தலைப்பில் இந்த ஆய்வரங்கு இடம் பெறவுள்ளது.

The Peninsula, 8 Village Way East, Rayners Lane, Harrow HA2 7LU எனும் முகவரியில் இவ் ஆய்வரங்கம் நடைபெறவுள்ளது. (ஐ)

## லண்டனில் புங்குடுதீவு நிகழ்வு







லண்டனில் ஹரோ மாநகரில் கடந்த சனிக்கிழமை புங்குடுதீவு நிகழ்வு இடம்பெற்றது. புங்குடுதீவு நலன்புரி சங்கத்தின் ஆதரவில் இடம்பெற்ற இந் நிகழ்வு, வழமையான ஆடல் பாடல் நிகழ்வுகள் போல இல்லாமல். புங்குடுதீவில் உள்ள வறிய மக்களை மையப்படுத்தியதாக அமைந்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. புங்குடுதீவை எவ்வாறு முன்னேற்றுவது. அங்கே அல்லலுறும் மக்களுக்கு எவ்வாறு வாழ்வாதாரத்தை கொடுப்பது என்பது போன்ற விவரணக் காணொலி ஒன்று செம்மையாக தயாரிக்கப்பட்டு, காண்பிக்கப்பட்டது.

இதில் சிறப்பு அம்சமாக புங்குடு தீவு இளையோர் அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. அடுத்த தலைமுறை இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் கூட இளையோர் அமைப்பில் இணைந்து தமது சொந்த மண்ணான புங்குடுதீவை முன்னேற்றவேண்டும் என்று ஆர்வம் காட்டி வருவது காணொலியைப் பார்த்தவர்களை மெய் சிலிர்க்க வைத்துள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக லண்டனில் புங்குடுதீவு நலன் புரிச்சங்கத்தால் பல நிகழ்வுகள் நடத்தப்பட்ட போதும், இம்முறை சற்று வித்தியாசமாக இந் நிகழ்வு நடத்தப்பட்டு, முன்னேற்றப் பாதைக்கு முதல் இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு நலன்புரிச்சங்கத்தின் தற்போதைய தலைவர், சிவபாலன் (சுரேன்) இச்சங்கத்தை மிகவும் திறம்பட வழி நடத்திச் செல்கிறார். (ஐ)

## பிரான்ஸ் நாட்டு அழகியாக ஈழத்து தமிழிச்சி



பிரான்ஸில் இவ்வாண்டு நடைபெற்ற Miss Elegante France அழகிப் போட்டியில் 30 இற்கும் மேற்பட்ட நாட்டு அழகிகளுக்குள் Miss Elegante France அழகியாக ஈழத்து தமிழிச்சி சபறினா கணேசபவன் தெரிவாகியமை ஈழத் தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கிறது. (ஐ)











டிசெம்பர் 3ஆம், 4ஆம் திகதிகளில் கனடா ரொரன்டோவில் நடைபெற்ற குளிர்கால இசைவேள்வி 2016 நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir






பொன்.வேணு கிருஷ்ணா

வாசகர்களே! அமெரிக்காவின் நவீன வரலாறு எவ்வாறு உலகை இரத்தச் சேறாக்கியது என்பதையும் புதிய வடிவில் காலனியாதிக்கத்தை நிலை நாட்ட அமெரிக்கா எடுத்துவரும் அரசியல் – இராணுவ நடவடிக்கைகள் எவை எவை என்பதை தொடர்பிலும் ஒரு பறவைப்பார்வையை பார்க்கத் தொடங்கியிருந்தோம். 19ஆம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரையாக – அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப்பதவியேற்கும் காலம்வரைக்கும் – அப்பார்வை இருக்கும். நேற்றைய தினம் (12.12.2016 திங்கள்) வெளியான கட்டுரைப்பகுதி, 19ஆம், 20ஆம் நூற்றாண்டு விடயங்களைத் தொட்டுச் சென்றது. எனினும், முக்கியத்துவம் கருதி மீண்டும் கடந்த வார மற்றும் இவ்வார அமெரிக்கவிடயங்களுக்குள் செல்லவேண்டியதாயிற்று. எனினும், பின்னர் அமெரிக்காவின் நவீன வரலாறு மீதான பறவைப் பார்வை வாசகர்களுக்கு இக் கட்டுரைத் தொடரினூடாகத் தரப்படும்.

– கட்டுரையாளர் –

### அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்ய உளவுத்துறை டொனால்ட் ட்ரம்பை ஆதரித்ததா?

வெள்ளைமாளிகையை டொனால்ட் ட்ரம்பிடம் ஒப்படைப்பதற்கு முந்தைய தனது இறுதி முன்முயற்சிகளில் ஒன்றாக, ஜனாதிபதி பராக் ஒபாமா, 2016 ஜனாதிபதித் தேர்தலில் தலையீடு செய்வதற்கு ரஷ்யா செய்ததாகக் கூறப்பட்ட முயற்சிகள் மீதான ஒரு முழுமையான திறனாய்வை நடத்துவதற்கு அமெரிக்க உளவு முகவரகங்



களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

ஒபாமாவின் உயர்நிலை பயங்கரவாத- எதிர்ப்பு ஆலோசகரான லிசா மொனாக்கோ வெள்ளிக்கிழமையன்று (09.12.2016) செய்தியாளர்களிடம் கூறினார் - *''நாம் ஒரு புதிய எல்லைக்குள் பிரவேசித்திருக்கக் கூடும், என்ன நடந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதற்காகவும் கற்ற சில பாடங்களைப் படிப்பிப்பதற்காகவும் அது என்ன வென்பதை அறிவதும், திறனாய்வு செய்வதும் சில பின்-நடவடிக்கைகளை மேற்கொள்வதும் எங்களது கடமையாகும்.''*


இந்த விசாரணை *'ஒரு பெரும் முன்னுரிமையுடையது'* என்று பின்னர் ஒபாமாவின் செய்தித் தொடர்பாளர் வெள்ளை மாளிகையில் நடந்த ஒரு செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

*''அமெரிக்க ஜனாதிபதிக்கு இது ஒரு முக்கிய முன்னுரிமை விடயமாகும்''* என்றார் துணை ஊடகச் செயலரான எரிக் ஸ்கல்ட்ஸ். *''இதனை மேற்கொள்வதற்கு அவர் தனது உளவு சேவைகளையும் தேசிய பாதுகாப்பு அதிகாரிகளையும் பணித்திருக்கிறார். அவர் பதவியில் இருந்து விடைபெறும் நாளுக்கு முன்பாக அந்த அறிக்கை*



*அவருக்குக் கிடைக்கும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.'*

'எந்த புதிய எல்லை' கடக்கப்பட்டிருக்கிறது? அமெரிக்க வரலாற்றின் மிகவும் தீவிர வலதுசாரி அரசாங்கத்தின் தலைவராக டொனால்ட் ட்ரம்ப் பதவியில் அமர்வதற்கு ஆறு வாரங்களுக்கு முன்பாக இந்த விடயம் ஒரு



'பெரும் முன்னுரிமை' பெற்ற பிரச்சினையாக ஆனது ஏன்?

அமெரிக்கத் தேர்தலில் செல்வாக்கு செலுத்த ரஷ்யா முனைந்ததான குற்றச்சாட்டு அமெரிக்க அரசாங்கத்தினால் ஒக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப் பட்டது, ஆயினும் ரஷ்ய குறுக்கீடு குறித்த தனது கூற்றுகளுக்கான பின்புலமாக முற்றிலும் எந்தவிதமான ஆதாரத்தையும் அது வழங்கியிருக்கவில்லை.

### கடந்த ஏழு தசாப்தங்களில் சி.ஐ.ஏ. வெளிநாடுகளில் எண்ணற்ற சந்தர்ப்பங்களில் தலையீடு செய்திருக்கிறது

அப்படியே அது உண்மையாக இருந்தாலும் கூட, வெளிநாட்டுத் தேர்தல்களில் தலையீடு செய்வதற்கான



'எல்லை' அமெரிக்காவால் மிக நெடுங்காலத்துக்கு முன்னரேயே தாண்டப் பட்டுவிட்டது. தேர்தல்களில் முறைகேடு செய்வதற்கோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்குப் போதுமான விசுவாசமாக இல்லாதிருப்பதாய் கண்டால் தூக்கியெறிவதற்காகவோ, கடந்த ஏழு தசாப்தங்களில் சி.ஐ.ஏ வெளிநாடுகளில் எண்ணற்ற சந்தர்ப்பங்களில் தலையீடு செய்திருக்கிறது. ஜனநாயகத்துக்கான தேசிய அறக்கட்டளை (National Endowment for Democracy) என்ற அதன் பொது வெளி அங்கம், ஜோர்ஜியா மற்றும் உக்ரேன் தொடங்கி வெனிசூலா, ஹோண்டுராஸ் மற்றும் ஹைத்தி வரையிலும் இதுபோன்ற நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்தி வந்திருக்கிறது.

அமெரிக்காதான் உலகின் வேறெந்த நாட்டை விடவும் மிகப் பெரும் இணையப் போர் திறன்களைக் கொண்டிருப்பதாக ஒபாமாவே பெருமையடித்திருக்கிறார்; அத்துடன் அது ரஷ்யா, சீனா மற்றும் ஈரானின் சிவில்



உள்கட்டமைப்புகளுக்கு எதிரான முடக்கும் தாக்குதல்களுக்கான திட்டங்களை அபிவிருத்தி செய்து வந்திருப்பதோடு அவற்றைத் தொடர்ச்சியாக பிரயோகம் செய்தும் வந்திருக்கிறது. ஜேர்மன் சான்சலர் அங்கேலா மேர்கெல் தொடங்கி பிரேசிலின் முன்னாள் ஜனாதிபதி தில்மா ரூசுப் வரையிலுமான உலகத் தலைவர்களின் தொலைபேசிகளையும் மின்னஞ்சல்களையும் கூட அமெரிக்கா ஊடுருவி களவாடியிருக்கிறது.

### ஜனநாயகக் கட்சியின் தேசியக் குழு மேற்கொண்ட மோசடியான முயற்சிகளை அம்பலப்படுத்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் அரசாங்கம் உதவியதா?

அப்படி என்னதான் ரஷ்யா செய்திருப்பதாகக் குற்றம் சாட்டப்படுகிறது?

தேர்தல் 'இணையப் பாதுகாப்பு கோணத்தில் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடந்திருந்தது' என்று சென்ற மாதத்தில் வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் அறிக்கை விடுத்திருந்தார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், வாக்களிப்பில் ரஷ்ய குறுக்கீடு எதுவும் இருக்கவில்லை. தேர்தல் முடிவுகள் 'அமெரிக்க மக்களின் விருப்பத்தைத் துல்லியமாக பிரதிபலிப்பனவாக' வும் அவர் சேர்த்துக் கொண்டிருந்தார், இது ஒரு கொடூரமான பொய், ஏனென்றால் கிட்டத்தட்ட 3 மில்லியன் வாக்கு வித்தியாசத்தில் மக்கள் வாக்களிப்பில் (Popular votes) தோற்றுத்தான் டொனால்ட் ட்ரம்ப் பதவியில் அமரவிருக்கிறார். விஸ்கான்சின், மிச்சிகன்



மற்றும் பென்சில்வேனியா ஆகிய முக்கியமான தொழிற்றுறை மாநிலங்களில் ஒரு மறுவாக்கு எண்ணிக்கையை நிர்ப்பந்தம் செய்வதற்காக பசுமைக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான ஜில் ஸ்ரைன் முன்னெடுத்த முயற்சிகளுக்கு எதிராகவே இந்த அறிக்கை விடுக்கப்பட்டது.

ஆக ரஷ்ய குறுக்கீடு குறித்த குற்றச்சாட்டுகளில் எஞ்சியிருப்பது என்னவென்றால், ஜனநாயகக் கட்சி அதன் சொந்த வாக்காளர்களிடம் கூறாமல் காப்பாற்றி வந்திருந்த இரகசியங்களை - குறிப்பாக, பேர்னி சாண்டர்ஸின் பிரசாரத்துக்குக் குழிபறித்து ஹிலாரி கிளிண்டன் ஜனாதிபதி வேட்பாளராவதை உத்தரவாதம் செய்வதற்கு ஜனநாயகக் கட்சியின் தேசியக் குழு மேற்கொண்ட மோசடியான முயற்சிகளை - அம்பலப்படுத்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் அரசாங்கம் உதவியது என்பது மட்டும்தான். வோல்






ஸ்டிரீட்டின் வங்கியாளர்களுக்கு விசுவாசத்தை உறுதியளிக்கும் கிளிண்டனின் உரைகள் மற்றும் ஜனநாயகக் கட்சி மற்றும் கிளிண்டன் அறக்கட்டளை இரண்டின் ஊழலடைந்த செயற்பாடுகள் ஆகியவற்றைப் பகிரங்கமாக்குவதற்காக, கிளிண்டனது பிரசார மேலாளரான ஜோன் போடஸ்டாவின் மின்னஞ்சல்களைத் திருடினார் என்றும் மொஸ்கோ மீது குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது.

ஒபாமா உத்தரவிட்டிருக்கும் திறனாய்வு குறித்து வெள்ளியன்று நியூயோர்க் டைம்ஸ் நாசூக்காகத் தெரிவித்தமையைப் போல, 'இந்த திறனாய்வின் உள்ளடக்கம் பகிரங்கப்படுத்தப் படுமா என்பது தெரியவில்லை.' ஆதாரம் ஏதும் அமெரிக்க மக்கள் முன்னால் வைக்கப்படப் போவதுமில்லை, ஏனென்றால் ஆதாரமே அங்கு இல்லை.

இறுதியில், ஒபாமா, ஹிலாரி கிளிண்டன் மற்றும் ஜனநாயகக் கட்சியினர் அமெரிக்க மக்களிடம் மறைத்துப் பாதுகாக்க விரும்பியிருந்த அசௌகரியமான அரசியல் உண்மைகளை வெளிக்கொண்டு வந்தமைக்காகத்தான் ரஷ்யா மீது குற்றம்சாட்டப்படுகிறது.

(கேள்வி தொடரும்...)





சிருஷ்டிப்புக் கலைதான் உன்னதமானது. கலைஞனாக வாழ்வதில்தான் அர்த்தம் இருக்கிறது. படைப்புத் தொழிலில் ஒருவன் தனது இருப்பின் அடையாளத்தை நிலை நிறுத்துகிறான். தனது வாழ்வனுபவத்தை மற்றவர்களுக்கு உணர்த்தி விடுகிறான். இறந்த பின்னரும் தனது சுவட்டை இந்த உலகத்தில் விட்டுச் செல்கிறான். ஒரு நாவல் எழுத வேண்டும் என கதாநாயகன் உறுதி செய்துகொள்வதுடன் தனது நாவலை முடிக்கிறார் சாத்தர்.

# மனிதத்துவம்

## சாத்தர் பற்றிய ஓர் அறிமுகம்

02

'இந்த உலகில் இருப்புக்கொள்வதெல்லாம் காரணம் எதுவுமின்றித் தோன்றுகிறது. பலவீனத்துடன் நிலைத்து நிற்க முனைகிறது. தற்செயலாக செத்துப் போகிறது. ஏன், எதற்காக இந்த உலகம் தோற்றம் கொண்டது? இருப்புக்குப்பதிலாக இல்லாமை இருந்திருக்கலாமல்லவா? எதையுமே என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை' அவன் சிந்திக்கிறான். இருப்பு அபத்தமாகத் தோன்றுகிறது.

இறுதியில் தனது வரலாற்று ஆய்வைக் கைவிட்டு அந்தப் பட்டினத்தில் இருந்து வெளியேறுகிறான். புகையிரத நிலையத்தில் தனது எதிர்காலம் பற்றிக் கவலை கொள்கிறான். அபத்தமான வாழ்க்கையில் அர்த்தம் காண்பது எப்படி? எனச் சிந்திக்கிறான்.

சிருஷ்டிப்புக் கலைதான் உன்னதமானது. கலைஞனாக வாழ்வதில்தான் அர்த்தம் இருக்கிறது. படைப்புத் தொழிலில் ஒருவன் தனது இருப்பின் அடையாளத்தை நிலை நிறுத்துகிறான். தனது வாழ்வனுபவத்தை மற்றவர்களுக்கு உணர்த்திவிடுகிறான். இறந்த பின்னரும் தனது சுவட்டை இந்த உலகத்தில் விட்டுச் செல்கிறான். ஒரு நாவல் எழுத வேண்டும் என கதாநாயகன் உறுதி செய்துகொள்வதுடன் தனது நாவலை முடிக்கிறார் சாத்தர்.

'குமட்டல்' என்ற இந்த நாவல் சாத்தரை பிரெஞ்சு இலக்கிய உலகில் அறிமுகப்படுத்தியது. கலைவடிவத்தில் தத்துவத்தை விளக்கும் பரிசோதனை முயற்சியாக அவர் இந்த நாவலை எழுதினார். கமுவின் 'அந்நியனுக்கும்' சாத்தரின் 'குமட்டலுக்கும்' சில ஒருமைப்பாடுகளைக் காணலாம். ஆனால், அடிப்படையில் வேறுபாடுகள் உள்ளன. இரு கதாநாயகர்களும் வாழ்க்கையில் விரக்திகொண்ட அபத்த மனிதர்கள். கமுவின் கதாநாயகனுக்கு மரணத்தின் வாயிலில் ஞானோதயம் பிறக்கிறது. வாழ்வின் அர்த்தத்தை அவன் உணர்ந்துகொள்கிறான். ஆனால், சாத்தரின் கதாநாயகனுக்கு இருத்தல் அசிங்கமாகத் தெரிகிறது. இருத்தலின் வெளிப்பாடு அருவருப்பைத் தோற்றுவிக்கிறது. வாழ்வு அபத்தமாக இருப்பினும் எழுத்தில் அர்த்தத்தைக் காணலாம் என்ற முடிவுக்கு வருகிறான். இருப்புப் பற்றிய ஓர் எதிர்மறையான சித்திரிப்பை இங்கு சாத்தர் தருகிறார். ஆனால், நாவலின் மையக் கருத்து வேறு. மனித மொழிக்கும், அந்த மொழியால் மனிதன் உருவகப்படுத்த முனையும் மெய்யுலகத்துக்கும் மத்தியில் பெரிய விரிசல் உண்டு. சொற்களால், கருத்துருவங்களால் மனிதன் கட்டி எழுப்பும் உலகம் வேறு, மெய்யுலகம் வேறு, வார்த்தைகளுக்கு அப்பாலான தூய்மையான பிரக்ஞையில் இருத்தலின் மெய்மையைக் கண்டு கொள்ளலாம். ஹுசேளிடம் உள்வாங்கிய இந்தத் தத்துவமே நாவல் வடிவம் எடுத்திருக்கிறது.

பிந்திய ஒரு காலகட்டத்தில், அதாவது 26 ஆண்டுகளுக்குப் பின்னர், சாத்தர் தனது முதலாவது நாவலைக் கடுமையாக விமர்சித்திருக்கிறார். "உலகம் பற்றிய அன்றைய பார்வையில் எனக்குத் தெளிவு இருக்கவில்லை. இன்று மெய்யுலகின் உண்மை நிலையை என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது. குழந்தைகள் பசியினால் மடிந்துபோவதை நான் கண்டிருக்கிறேன். செத்துக்கொண்டிருக்கும் ஒரு குழந்தையின் அவலத்துக்கு எனது நாவல் ஈடாக முடியாது" என்று அவர் எழுதியிருக்கிறார்.

1943 ஆம் ஆண்டு பாரிஸ் நகரை ஜேர்மனியர் ஆக்கிரமித்து இருந்த காலத்தில், இருத்தலும் இல்லாமையும் (Being and Nothingness) என்ற சாத்தரின் பிரபல தத்துவ நூல் வெளியாகியது. ஆயிரம் பக்கங்களைக் கொண்ட இந்த நீண்ட கனமான தத்துவப் படைப்பு மனித பிரக்ஞையின் பல்வேறு உணர்வு நிலைகளை மிகவும் நுணுக்கமாக அலசிப் பார்க்கிறது. ஹுசேளின் உணர்வாய்வுத் தத்துவத்தைத் தழுவி நின்றபோதும், சாத்தரின் இருப்பியக் கருத்துக்கள் இந்த நூலில்தான் அறிமுகம் செய்யப் படுகின்றன.

மனவுலகத்தையும் பொருளுலகத்தையும் இருப்பின் இரு முகங்களாக, இரு முரண்பட்ட சக்திகளாக விளக்கிக் காட்ட முனையும் சாத்தர், அகத்தினதும் புறத்தினதும் சிக்கலான உறவு பற்றி மிகவும் நீண்ட தத்துவார்த்த வியாக்கியாணங்களைத் தருகிறார். இந்த உறவு பற்றிய ஆய்வில் மனித மனம் முதன்மை பெறுகிறது; தனித்துவம் பெறுகிறது. எல்லா நிர்ணய சக்திகளுக்கும் அப்பால் சுயாதீனம் கொண்டதாக, சுதந்திரம் கொண்டதாகச் சித்திரிக்கப்படுகிறது.

மெய்யுலகம் எனக்குப் புறம்பாக இருக்கிறது. என்னைச் சூழ இருக்கிறது. எனது புலனுக்கு எட்டிய தூரத்தில் எங்கும், எல்லா இடமும் வியாபித்து நிற்கிறது. எனது தோற்றத்துக்கும் முன்பே அது இருந்தபடியே இருக்கிறது. ஏற்கெனவே எப்படியோ, ஏதோ ஒரு வழியில், அது உருவாக்கம் பெற்று நிற்கிறது. இருப்பாக இருந்து கொண்டே இருக்கிறது. அதற்கு வடிவம் இல்லை; உருவம் இல்லை; பண்புகள் இல்லை; இயல்புகள் இல்லை; அவை எல்லாம் மனித மனதால் சிருஷ்டிக்கப்பட்டவை. மனமே இந்த உலகுக்குப் பொருளைக் கொடுக்கிறது; பண்பைக் கொடுக்கிறது; அர்த்தத்தைக் கொடுக்கிறது. காலம் என்றும், வெளி என்றும், காரணக் காரியம் என்றும், தேவை என்றும், இயல்பு என்றும், பண்பு என்றும் நாம் பாவிக்கும் பதங்கள் இந்த உலகத்தைத் தரம் பிரித்து, வகைப்படுத்த நாம் கையாளும் கருதுகோள்கள்; அளவு கோல்கள்.

மனித மனமே இந்த உலகத்துக்கு ஆடைகளை அணிந்து அழகுபடுத்தியிருக்கிறது. பூச்சுக்களைப் பூசிவிட்டிருக்கிறது. அர்த்தங்களைப் பிதுக்கிவிட்டிருக்கிறது. தான் விரும்பியவாறு, தனது இயல்புகளிலிருந்து, தனது அளவுகோல்களிலிருந்து, இந்த உலகத்தை மனமே சிருஷ்டித்துள்ளது. ஆனால், இந்த உலகமானது மனித கணிப்புகளுக்கு அப்பால், மனித அனுமானங்களுக்கு அப்பால், மனித கற்பிதங்களுக்கு அப்பால் மனிதனுக்குப் புலனாகாத மெய்ப்பொருளாய், மெய்யுண்மையாய் இருப்புக்கொண்டு இருக்கிறது. நாம் காணும் இந்த நிஜ உலகம், நாம் பட்டுணர்ந்துகொள்ளும் இந்தப் புற உலகம் மனிதனின் உலகம்; மனிதனால் வனையப்பட்ட உலகம்.

சாத்தரின் இந்தத் தத்துவார்த்த விளக்கம், பொருளுலகத்தை, புலனானுபவத்துக்கு அப்பாலான மாயப்பொருளாக, மறைபொருளாகச் சித்திரிக்க முனைகிறது. அகத்திலிருந்து புறத்தைத் துண்டித்துவிட விழைகிறது. மனித மனதுக்கு அலாதியான முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது.

(தொடரும்...)

> உலகம் பற்றிய அன்றைய பார்வையில் எனக்குத் தெளிவு இருக்கவில்லை. இன்று மெய்யுலகின் உண்மை நிலையை என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது. குழந்தைகள் பசியினால் மடிந்துபோவதை நான் கண்டிருக்கிறேன். செத்துக்கொண்டிருக்கும் ஒரு குழந்தையின் அவலத்துக்கு எனது நாவல் ஈடாக முடியாது'

### தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்

*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*



*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

*''இந்த எழுத்துக்கள் யாரையாவது சிந்திக்கத் தூண்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு'' - என்ற எதிர்பார்ப்புடன் அவர் வரைந்த இந்தக் கட்டுரைத் தொடரை நமது தற்போதைய சமூகத்தின் சிந்தனைக்காக இங்கு முன்வைக்கிறோம்.*

*அவர் எதிர்பார்த்தமை போல மனித மனம் பற்றிய இந்தத் தொடர், நமது வாசகர்களின் சிந்தனையைத் தூண்டும் என்றே நாமும் நம்புகிறோம்.*

*அவரது சிந்தனைத் தெளிவை நாமும் தரிசிப்போம். வாருங்கள்...!*

காலைக்கதிர் Kalaikkathir



### இலங்கை — இந்தியா இணைந்து

# போதைப்பொருள் கடத்தலை தடுக்க கூட்டு நடவழக்கை

கொழும்பு, டிசெ.14

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் கூட்டாக இணைந்து போதைப் பொருள் கடத்தல்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இரு நாடுகளினதும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவுகள் இணைந்து செயற்படவுள்ளன. ஆங்கில ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை 12 கோடி ரூபாவுக்கும் அதிகமான மதிப்பைக் கொண்ட கொக்கைன் போதைப்பொருள் தொகுதி ஒன்று கொழும்புத் துறைமுகத்தில் மீட்கப்பட்டிருந்தது. தெற்காசியாவிலேயே மீட்கப்பட்ட பெருந்தொகையான போதைப் பொருள் தொகுதி இது தான். இந்தப் போதைப் பொருள் இலங்கை ஊடாக இந்தியாவுக்குக் கடத்தப்பட இருந்த நிலையிலேயே மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அத்தியாவசிய ஔடதங்களின் விலை குறைப்பால் 6 பில்.லாபம்

கொழும்பு, டிசெ.14

அத்தியாவசிய ஔட தங்கள் 48 இன் விலை குறைப்புக் காரணமாக 6 பில்லியன் ரூபா வர்த்தக இலாபத்தை ஈட்ட முடிந்துள்ளது என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனா ரட்ன தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குத் தேவையான ஔடதங்களை உற்பத்தி செய்யும் ஹொரண பிரதேசத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் சிலவற்றுக்கு நேற்று முன்தினம் விஜயம் ஒன்றை மேற் கொண்டிருந்த அமைச்சர் இதனை தெரிவித்திருந்தார்.

மேலும் , 2019 ஆம் ஆண்டளவில் நாட்டுக்குத் தேவையான அனைத்து ஔடதங்களையும் இலங்கையிலேயே உற்பத்தி செய்துகொள்வதே தமது அமைச்சின் நோக்கம் என்று அமைச்சர் தெரிவித்திருந்தார். (எ)

## தினசரி ராசி பலன் 14.12.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 9.15 – 10.15 |
| | மாலை : 4.45 – 5.45 |
| ராகு காலம் | : 12.00 – 1.30 |
| குளிகன் | : 10.30 – 12.00 |
| எமகண்டம் | : 7.30 – 9.00 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

**சம நோக்கு நாள்**

**மேஷம்:** பாராட்டு - உழைப்புக்குத் தகுந்த பாராட்டுக்கள் கிடைக்கும்.

**ரிஷபம்:** சிந்தனை - வளமான வாழ்க்கைக்குத் தேவையான ஆற்றல்கள் அறிவு சுடர்விடும் நாள்.

**மிதுனம்:** யோகம் - அதிர்ஷ்டம் அழையா விருந்தாளிகளாக வீட்டு வாசல் கதவுகளைத் தட்டும் யோகம் தரும் நாள்.

**கடகம்:** வரவு இன்று எதிர்பாராத வகையில் வரவுகள் வரும்.

**சிம்மம்:** பகை - எதிர்பாராத சண்டை சச்சரவுகளினால் மனதளவில் பகை துளிர்விடும்.

**கன்னி:** அசதி - உழைப்பால் உடம்பில் களைப்பு ஏற்படும்.

**துலாம்:** அலைச்சல் - வீண் அலைச்சல்களும் மன உளைச்சல்களும் உண்டாகும்.

**விருச்சிகம்:** ஆர்வம் இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் செய்யும் செயல்கள் அனைத்திலும் ஆர்வம் மிகுந்து நிதானத்துடன் இருக்கும் நன்னாள். சந்திராஷ்டமம் : அனுஷம், கேட்டை.

**தனுசு:** யோகம் - அதிர்ஷ்டம் அழையா விருந்தாளிகளாக வீட்டு வாசல் கதவுகளை தட்டும் யோகம் ஏற்படும்.

**மகரம்:** நிம்மதி - வளமான வாழ்வும் அமைதியும் வாசல் கதவைத் தட்டும். நிம்மதி தரும் நன்னாள்.

**கும்பம்:** நற்சொல் - நல்ல எண்ணங்கள் யாவும் நற்சொற்களாக மிளிரும் நாள்.

**மீனம்:** பணிவு - உறவினர்களிடமும் நண்பர்களிடமும் பணிவுடன் செயல்பட்டு செயல்களை நிறைவேற்றுவீர்கள்.

# அரிசியின் விலை அதிகரித்தால் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி

### கிராமிய பொருளாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.14

பண்டிகைக் காலத்தில் அரிசியின் விலை உயர்த்தப்பட்டால் அரிசியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய நேரிடும் என்று கிராமியப் பொருளாதார அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

கன்னொருவ பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''அரிசியின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பத்தாயிரம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரிசி இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னர் உள்நாட்டுச் சந்தையில் விலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டால் மட்டும் இறக்குமதி நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.

வறட்சியான காலநிலை தொடர்ந்தும் நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் அரிசி உற்பத்தி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

சதொச நிறுவனத்தின் ஊடாக அரிசி இறக்குமதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

நாட்டின் விவசாயியைப் பாதுகாப்பது போன்றே நுகர்வோரையும் பாதுகாக்க வேண்டும்.''-என்றார். இதேவேளை அண்மைய நாள்களில் அரிசியின் விலை சடுதியாக உயர்வடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# எமில்டன் வனப்பகுதியை பார்க்கச் சென்ற ஐவர் மாயம்

மஸ்கெலியா, டிசெ.14

மஸ்கெலியா எமில்டன் வனப் பகுதியைச் சுற்றிப் பார்க்கச் சென்ற ஐவர், நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு முதல் காணாமற் போயுள்ளனர் என்று நல்லத்தண்ணி பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருடன் இணைந்து அதிரடிப் படையினரும் அவர்களைத் தேடும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று பொலிஸார் மேலும் கூறினர்.

லக்சபான வாழமலைத் தோட்ட முகாமையாளரின் புதல்வர் உட்பட ஐவரே இவ்வாறு காணாமற் போயுள்ளனர்.

அவர்கள், சிவனொளிபாத மலைக்குச் சென்றுவிட்டு பின்னர், எமில்டன் காட்டுக்குச் சென்றுள்ளனர் என்று தெரிய வருகிறது.

நேற்று முன்தினம் இரவு முதல் அவர்களுடன் எவ்வித தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்களது உறவினர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், பொலிஸாரும் அதிரடிப்படையினரும் மூன்று குழுக்களாகப் பிரிந்துச் சென்று தேடுதல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

## பண்டிகைக் காலத்தில் நுகர்வோரின் முறைப்பாடுகள் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.14

பண்டிகைக் காலத்தில் நுகர்வோரால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கடந்த மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் மூவாயிரம் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன என்று நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலை வர் ஹசித்த திலகரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இந்த முறைப்பாடுகளில் 2 ஆயிரத்து 800 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (எ)

# இலங்கை கடற்படைக்கு தமிழக மீனவரை தாக்குவதற்கு எந்த அதிகாரமும் இல்லை

### இந்திய மத்திய அமைச்சர் ராதாகிருஷ்ணன் கண்டனம்

சென்னை, டிசெ.14

தமிழக மீனவர்களைத் தாக்குவதற்கு இலங்கைக் கடற்படையினருக்கு எந்த அதிகாரமும் கிடையாது என்று தெரிவித்துள்ளார் இந்திய மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன்.

தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் மதுரை விமான நிலையத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களைத் தாக்குவதற்கு இலங்கைக் கடற்படையினருக்கு எந்த அதிகாரமும் கிடையாது.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டமை கண்டிக்கத்தக்க விடயம்.

இருநாட்டு அரசும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி எல்லை தாண்டிச் சென்று மீன் பிடித்தாலும் எந்தக் காரணம் கொண்டும் தாக்கக்கூடாது என்று எழுத்து மூலமாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், இருநாட்டு அதிகாரிகள் மட்டத்திலான பேச்சு இந்த மாத இறுதியில் இடம்பெறவுள்ளது. அதன் தொடர்ச்சியாக எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி இருநாட்டு அமைச்சர்களும் சந்தித்துக் கலந்துரையாட



உள்ளனர். இந்தச் சூழ்நிலையில் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் மேற் கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது. சம்பந்தப்பட்டவர்களுக்கு இலங்கை அரசு தண்டனை வழங்கும் என்று நம்புகிறேன்.

கச்சதீவில் நடைபெறும் தேவாலயத் திறப்பு விழாவில் தமிழக பக்தர்கள் கலந்துகொள்ள அனுமதி அளித்திருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.''- என்றார்.(எ)

# உர நிவாரணத் தொகை வைப்பீடு நடைமுறை இன்று ஆரம்பமாகிறது

கொழும்பு, டிசெ.14

பெரும்போகப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான உர நிவாரணத் தொகையை வங்கிக் கணக்குகளில் வைப்பீடு செய்யும் நடைமுறை இன்று ஆரம்பமாகிறது.

இது தொடர்பாக விவசாய அமைச்சின் மேலதிக செயலாளர் விஜித் சந்திர பியதிலக தெரிவித்தவை வருமாறு:-

''அரச ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கும் வகையில் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாகப் பணம் வைப்பீடு செய்யப்படும். இந்த நடைமுறையில் பணத்தைப் பெற்றுக் கொள்வதில் தாமதங்கள் ஏற்படமாட்டா.

இம்முறை போதிய மழை பெய்யாத காரணத்தால் பெரும்போக பயிர்ச் செய்கை தாமதமாகியிருந்தது.

இதன் காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, கம்பஹா ஆகிய நான்கு மாவட்டங்களில் இருந்து மாத்திரமே பயிர்ச்செய்கையை ஆரம்பித்த விவசாயிகளின் பட்டியல்கள் கிடைத்துள்ளன.

நிவாரணத் தொகைக்குரிய பணத்தை வைப்புச் செய்யும் நடைமுறை எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும்.''-என்றார். (எ)

காலைக்கதிர்
Kalaikkathir





# பாலா ஓர் ஆன்மீகவாதி...

# அவரோடு ஒரு பக்குவ வாழ்க்கை...

## அடேல் அன்ரியின் அனுபவப் பகிர்வு

**தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் ஸ்டனிஸ்லஸ் பாலசிங்கத்தின் பத்தாவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும்.**

**அவருடன் உயிரோடும் உணர்வோடும் ஒன்றி வாழ்ந்துவிட்ட திருமதி அடேல் பாலசிங்கம், தமது கணவரின் ஒப்புயர்வற்ற பண்பியல்பு குறித்து குறிப்பிட்ட சுருக்கக் கருத்தை அவரது நினைவு தினத்தை ஒட்டி இங்கு தருகிறோம். மதியுரைஞர் பாலசிங்கம் உயிரோடு இருந்த சமயம் தமது ' சுதந்திர வேட்கை' நூலில் திருமதி பாலசிங்கம் இந்த விடயங்களை விவரித்துள்ளார்.**

எழுபதுகளில் நான் பாலசிங்கத்தைச் சந்தித்து நேசிக்கத் தொடங்கியபோது, எனது வாழ்க்கை இத்தகை திருப்பங்களைச் சந்திக்கும் என்று நினைத்தே பார்க்கவில்லை. எனது சமூகக் கலாசார சூழலில் இருந்து முற்றிலும் முரண்பாடான சூழலைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்கின்றேன் என்ற அந்த ஒன்றே, எமது திருமணம் மறக்க முடியாதபடி ஒரு வித்தியாசமான திருமணமாக அமைந்தது. அதெப்படி? இரண்டு வெவ்வேறு கலாசாரங்களில் இருந்து வரும் இரண்டு பேர், திருமணம் என்ற பொதுத் தளத்தில் சந்திக்கக் கூடுமாக இருக்கின்றது? அது வெறும் உடற் கவர்ச்சியாக இருந்திருக்க முடியாது. கவர்ச்சியேதான் என்றால் எமது அந்த உறவு அவ்வளவு ஆழமாகவும், நெஞ்சார்ந்தமாகவும் இருந்திருக்க முடியாது. அப்படி என்றால் எம்மைப் பிணைத்தது எது? இத்தகைய ஓர் அசாதாரண பாதையில் என்னை அவரோடு இட்டுச் சென்றது எது?

பல ஆண்டுகளுக்கு முன்னதாக நான் மணம்புரிந்த பாலசிங்கம் இப்போதும் சாராம்சத்தில் அதே மனிதராகவே இருக்கின்றார். ஆனால், காலமும் சூழலும் அவரை இன்றைய நிலையில் உள்ள சிந்தனையாளராகவும், ஆளுமையாளராகவும் ஆக்கி இருக்கிறது. கால் நூற்றாண்டுக்கு முன் நான் மணம் புரிந்த மனிதரை ஓர் ஆன்மீகவாதி என்றுதான் கூறுவேன். ஆன்மீகவாதி என்று கூறும்போது, நிறுவனமாகிவிட்ட சமயங்களையும், நிலைபெற்ற சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் கடைப்பிடிப்பவராக நான் அவரைக் குறிப்பிடவில்லை. மாறாக நேர்மை, நற்சீலம், மனித நேயம் ஆகியவை பொதிந்த மனிதராகவே அவர் இருந்தார் என்றே கூறுவேன்.

நாம் முதலில் சந்தித்தபோது பாலாவுக்கு வயது 36. அப்போது கீழைத்தேய தத்துவ சிந்தனைகளை, குறிப்பாக, இந்திய வேதாந்த தத்துவங்களை அவர் நிறையவே படித்திருந்தார். புத்தரின் போதனைகளில் அவருக்குத் தனியான நாட்டம் இருந்தது. உண்மையில் இளவயதிலேயே பௌத்த தத்துவம் அவரை வெகுவாகக் கவர்ந்தமையால் இலங்கையில் பௌத்த கல்விமான்களைத் தரிசித்து விளக்கங்களையும், தத்துவத் தெளிவையும் பெற்றிருக்கிறார். பொது மேடைகளில் பௌத்த உரைகளைக் கூட நிகழ்த்தியிருக்கிறார். உண்மையான பௌத்த தத்துவத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தமையால் சிறீலங்காவில் நிலவிய பௌத்தத்தில் அவர் நம்பிக்கை இழந்தார். இனவாத மற்றும் குறுகிய தேசியவாதக் கோட்பாடுகளால் அது களங்கப்பட்டு விட்டது என அவர் கருதினார். ஆயினும், தனிப்பட்ட முறையில் அவருக்கு ஏற்பட்ட பேரிழப்பே அவருக்குள் அளப்பரிய சிந்தனா சோதனையை ஏற்படுத்தியது. தம்மையும், தாம் தீவிரமாகக் கடைப்பிடித்த தத்துவங்களையும் தாமே தமக்குள் கேள்விக்குரியவை ஆக்கினார். அவருடைய முதல் மனைவி கடும் சிறுநீரக நோயால் பீடிக்கப்பட்டு உயிரைத் தக்கவைக்க வெளி இணைப்புக் குருதிச் சுத்திகரிப்பு இயந்திரத்தில் தங்கியிருக்க வேண்டிய அறுதி நிலை ஏற்பட்டபோது, தர்மம் பற்றியும் அறநெறி பற்றியும் பாலா கொண்டிருந்த நிலைப்பாடு சோதனைக்குள்ளாகியது. கடும் நோயால் பீடிக்கப்பட்டு, மரணத்தின் விளிம்பில் ஊசலாடிக் கொண்டிருந்த தமது அழகிய இளம் மனைவியைக் கண்காணித்துப் பராமரிக்கும் போது மனோரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் அவருக்கு ஏற்பட்ட அழுத்தங்கள் மனிதம் பற்றியும், மானுட உலகம் பற்றியும் அவருடைய உள்ளார்ந்த தத்துவ சுய தேடலை மேலும் ஆழமாக்கியது. உடல் நோயின் காரணமாக மானுட சரீரத்தில் ஏற்படும் சீரழிவும் மாற்றமும், அத்தோடு நித்தமும் மரணத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலையும் மானுட இருப்பின் அர்த்தம் பற்றி அவரை ஆழமாகச் சிந்திக்க வைத்தன. தனித்துவம் வாய்ந்த அனுபவங்களையும் அவர் பெற்றார். அவை தந்த சிந்தனைத் தெளிவு அவரை ஒரு மதியூகியாக்கின. யதார்த்த உலகிலே அவர் ஒரு பகுத்தறிவு வாதியாகக் காலூன்றவும் வழிகோலின.

ஒரு புறம் கடுமையான பொருளாதாரப் பிரச்சினை. மறுபுறம் மரணத்தின் பிடியில் சிக்கியிருக்கும் அவருடைய துணைவியின் மன உளைச்சலுக்கும், உடல் பராமரிப்புத் தேவைக்கும், ஈடுகொடுக்கும் பொறுப்பு இவற்றுடன் போராடிய இந்தக் கட்டம், பாலாவின் வாழ்வில் ஒரு தார்மீகச் சவாலாக அமைந்த காலம்; அவருடைய ஆளுமையின் திண்மையே சோதனைக்கு உள்ளான காலம் இது. அவருடைய வாழ்க்கையின் இந்த அத்தியாயத்தில் அவர் முகம் கொடுத்த சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள், அவருடைய சகிப்புத் தன்மையின் எல்லைக்கு, அவரை இழுத்துச் சென்றிருந்தன. தர்மம், நல்லறம் ஆகியவை, வெறும் நூல்களில் இருந்து அகழ்ந்து எடுக்கப்படும் வார்த்தைகள் அல்ல. அன்றி வலிந்து ஊட்டப்படுவனவும் அல்ல. மாறாக அவை எமது உயிர் வாழ்வின் மூலாதாரமாக எழுபவை. எண்ணமும், செயலும் ஒத்திசைவு கண்ட திறனாற்றல் அவை என்பதை அவர் பட்டறிந்து உணர்ந்து தேறினார். அவருடைய மனைவி, ஐந்து ஆண்டு காலம் உயிரைத் தக்க வைக்கும் வெளியிணைக் குருதிச் சுத்திகரிப்பு இயந்திரத்தில், கூடுத லான காலம் வீட்டிலேயே அழுந்தியபின் காலமானார். தாங்கொணா மன நெருக்குவாரத்துக்கு பாலா உள்ளான இந்தக் கால கட்டத்திலேயேதான், தமது ஆயுட் கண்டமும் இதுவே என்ற கொடுமை அவர் முகத்தில் உறைந்தது. நீரிழிவு நோய் பாலாவுக்கு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இதன் பின்னர் தமது சுயதேடல்களின் விளைவாகவும், உள்ளார்ந்த புலன்களின் கூர்மைப் படுத்தப்பட்ட ஒரு பிரதிபலிப்பாகவும் முகிழ்ந்து, புடமிட்ட ஒரு புதுமைப் பிறவியாக அவர் தேறினார். இதன் விளைவாக ஆன்மீகர் என்று வர்ணிக்கக் கூடியவராக அவர் மாறினார். இத்தகைய ஓர் ஆன்மீகரையே எனது துணைவராகப் பெறவேண்டும் என்ற தேடலில் நான் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். ஆனாலும் நான் சந்தித்த அந்த மனிதரை, என் கணவராகிவிட்ட அந்த மனிதரை வெறும் வார்த்தைகளால் வர்ணிக்க விரும்பும் நான் அவரை ஓர் " உண்மையான மனிதப் பிறவி" என்பேன். நான் மணக்க இருப்பவரிடம் என்னென்ன குணாம்சங்கள் இருக்க வேண்டும் என்று காத்திருந்தேனோ அவை எல்லாம் பாலாவிடம் பொதிந்தும் இருந்தன. முதிர்ச்சி; விவேகம்; மனோபலம்; இனி, இவற்றிலும் மேலாய்ப் பரிவு. விவேகம் எனும் போது ஒரு புத்திஜீவியை நான் எதிர்பார்க்கவில்லை. மனோபலம் எனும் போது ஒரு பயில்வானாகவோ, சண்டியனாகவோ இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. நான் எதிர்பார்த்த சீலங்களோடு உள்ள அந்த அசாதாரண மனிதரைச் சந்திக்க நம்பிக்கையோடு காத்திருந்தேன். அவர் அடக்கமுள்ளவராக இருக்க வேண்டும்; ஆனால் கோழையாக இருக்கக் கூடாது. சாதாரணமானவராக இருக்க வேண்டும்; ஆனால் அவரில் ஆழம் இருக்க வேண்டும். உறுதியான கொள்கைப் பிடிப்பு இருக்க வேண்டும்; ஆனால் மமதை இருக்கக் கூடாது. தயாளகுணமும், பெருமையும் இருக்க வேண்டும்; ஆனால் அகங்காரம் கூடாது. இனி சுயநலவாதியாகவோ முன்யோசனையற்றவராகவோ இருக்கக் கூடாது. இந்தப் புருஷலட்சணங்கள் பொருந்தியவரைத்தான் பல ஆண்டுகளுக்குமுன் சந்தித்தேன். அவரை முதலில் சந்தித்த ஓரிரு வாரங்களிலேயே பாலாதான் என்னுடையவர் என்பதைப் புரிந்து கொண்டேன். சாதாரண அன்றாட முறைகள் தொடர்பாக, இனிப் பணம் சேமிப்பது தொடர்பாக, சாதாரண ஆள்கள் பொதுவாகப் புரியும் காரியங்களில் அவர் அக்கறை இல்லாமல் இருந்தமைக்கு - அவருடைய ஆன்மீகப் பண்புகளே காரணமாக இருந்திருக்க வேண்டும். பொருளிய பாதுகாப்பு மட்டில் அவர் பற்று இல்லாமல் இருந்தமையால், கையில் காசு இல்லாக் கையறு நிலைக்கு, இயல்பாகவே நாம் தள்ளப்படவும் நேர்ந்தது. ஆனால், எம்மிடமிருந்த சொற்பப் பணத்தோடு பாலா எப்படியோ சமாளித்தார். இல்லை! நிலைமையைச் சமாளித்தோம் எனலாம். அன்றாடச் சமாளிப்பேதான். ஆனால், ஒருவரை ஒருவர் நேசித்தநிலையில் மகிழ்ச்சியோடு வாழ்ந்தோம்.

வாழ்வு, சத்தியம் ஆகியவை தமது மனதிலே தோற்றுவித்த கேள்விகளுக்கு விடைதேடும் முயற்சியில், மேற்குலக தத்துவ மரபுகள் பொதிந்த பெருந்தொகை நூல்களைப் பாலா படித்தார். அவருடைய ஆன்மீக ஈடுபாட்டைச் சமநிலைப் படுத்திய ஒரு முக்கிய செல்வாக்காக மாக்ஸியமும், நவ மாக்ஸியமும் அமைந்தன. பாலா நன்கு கற்றுத் தேர்ந்த துறைகளே அவை. ஆனால், இவை தொடர்பாகப் பிரத்தியேகக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் அவர் கொண்டிருந்தார். தந்தக் கோபுர அறிவு ஜீவிகளின் தத்துவங்களை அவர் நிராகரித்தார். அவ்வாறே புரிந்துகொள்ள முடியாத பூடகமான கருத்துருவங்களையும் மனித ஆற்றல்களால் சாதிக்க இயலாத விடயங்கள் பற்றிக் கூறும் சிந்தனை வடிவங்களையும் அவர் நிராகரித்தார். மாறாகத் தத்துவம், உலகை மாற்றியமைக்க வேண்டும் என்ற மாக்ஸிய தத்துவ சிந்தனைக் கீற்று, அவருக்குப் பிடித்திருந்தது.

மானுட சமுதாயத்தை ஓர் உயர்நிலைக்கு முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று கூறும் இந்த எதிரும், புதிருமான தத்துவ எண்ணக் கருக்களின் இடைப்பட்ட ஒரு நுண்ணிய பாதையை பாலா கடைப்பிடித்தார் என்றே கூறுவேன். ஒரு புறம் மானுட சமுதாயத்தின் அவசியத் தேவையான தனியாளின் அகநிலை மாற்றத்தை முதன்மைப்படுத்தும் கீழைத்தேய தத்துவ ஞானம். மறுபுறம் சோசலிச சிந்தனை; கூட்டு முயற்சி மூலம் அரசியற் செயற்பாட்டை இது வலியுறுத்துவது, மனித வாழ்க்கையில் உண்மையான நிலைமாற்றத்துக்கு வழிசமைத்துக் கொடுக்கும் மூலபலத்தைக் கொண்டது இது. புரட்சிகர அரசியலில் நாம் ஈடுபடுவதற்கு முந்திய ஒரு காலகட்டத்தில், மானுட மேம்பாட்டை வலியுறுத்தும் அகநிலை, புறநிலை சார்ந்த தத்துவ தரிசனங்களைப் புணர்த்திப் பார்க்க பாலா முயன்றார். இதன் வெளிப்பாடே அவருடைய கலாநிதி ஆய்வு முயற்சி. இதில் மாக்ஸின் சமூக தத்துவத்தையும் சிக்மண்ட் பிராய்டின் உளவியல் தரிசனத்தையும் இணைத்து இழைக்க முயன்றார். ஆனால், அவருடைய இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தேவைகள் அவருடைய ஆய்விலும் கற்பித்தலிலும் அடிக்கடி தலையிட்டுக் கொண்டிருந்தன. அந்தத் தருணத் திலேயே, ஒன்றில் அறிவியல் ஆய்வு வாழ்க்கையை அல்லது புரட்சிப் போக்கு அரசியலை அவர் தேர்ந்து எடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தமது மக்களின் போராட்டம் நியாயமானது என்றும், அதற்கு ஊழியம் புரிவதே தர்மம் என்றும் அவர் கருதியமையால், புரட்சிப் போக்கு அரசியலையே அவர் தேர்ந்தெடுத்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# சென்னையில் நிவாரணப் பணிகள் மும்முரம்; 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இதுவரை மீட்பு!

டில்லி, டிசெ.14

சென்னை உள்ளிட்ட புயல் தாக்கிய மாவட்டங்களில் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

தென்கிழக்கு வங்கக் கடலில் உருவான 'வர்தா' புயல் சென்னைத்துறைமுகம் அருகே நேற்று முன்தினம் மதியம் 2.30 மணியில் கரையைக் கடந்தது. இதன்போது மணிக்கு 140 கி.மீற்றர் வேகத்தில் சூறாவளிக் காற்று வீசியது. இதனை அடுத்து பலத்த மழையும் பெய்தது.

இதனால் வீதிகள், வீடுகள் மற்றும் அலுவலகங்கள் எனப் பல இடங்களில் மரங்கள் விழுந்தன. மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டது. இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டது. சென்னை முழுவதும் சுமார் 3 ஆயிரத்துக்கும் அதிகமான மரங்கள் சாய்ந்து விழுந்தன. நகரத்தின் அனைத்து வீதிகளிலும்



மரக்கிளைகள் சாய்ந்து கிடக்கின்றன.

இந்த நிலையில், சென்னைஉள்ளிட்டபுயல் தாக்கிய மாவட்டங்களில் இருந்து இதுவரை 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

சுமார் 300 இற்கும் அதிகமான நிவாரண முகாம்களில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவு, இருக்கை மற்றும் கழிப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை சென்னையில் புயல் மழையால் ஏற்பட்ட பாதிப்புகளை சரி செய்யும் பணியில் வெளி மாவட்டங்களில் இருந்து 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

துப்புரவுப் பணியாளர்கள் மட்டும் 300 பேர் திருப்பூர் மற்றும் கோவையில் இருந்து சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். திருப்பூர் மாநகராட்சி சார்பில் 150 துப்புரவுப் பணியாளர்களும், கோவையில் இருந்து 3 அரசு பஸ்களில் 10 சுகாதார மேற்பார்வையாளர்களுடன் 150 துப்புரவுப் பணியாளர்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை மாநகராட்சி அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் இவர்கள் சீரமைப்புப்பணிகளை மேற்கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## போயஸ் கார்டனிலிருந்து வெளியேறுகிறார் சசிகலா?



சென்னை, டிசெ.14

போயஸ் கார்டன் இல்லத்திலிருந்து சசிகலா வெளியேறப் போகின்றார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னர் சொத்து உரிமையாருக்குச் செல்லும் என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுந்துள்ளது.

இந்த நிலையில் போயஸ் கார்டன் இல்லத்திலிருந்து சசிகலா வெளியேறப்போகின்றார் என்று வெளிவந்துள்ள தகவல் எல்லோருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், போயஸ் கார்டன் வீட்டை 'அம்மா நினைவகம்' என்று பெயர் மாற்றி ஜெயலலிதாவின் நினைவகமாக மாற்றவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. போயஸ் கார்டனுக்கு வரும் பொதுமக்களைச் சந்தித்து ஆறுதல் கூறி வருகிறார் சசிகலா. கட்சித் தொண்டர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் சலசலப்பு எழாமல் பொறுப்புகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது சசிகலா தரப்பினரின் எண்ணமாக இருக்கிறது. (எ)

# இந்தியாவின் நட்பு நாடுகளில் முதன்மை பெறுகிறது இந்தோனேசியா

## பிரதமர் மோடி தெரிவிப்பு

டில்லி, டிசெ.14

இந்தியாவின் நட்பு நாடுகளில் முதன்மை பெறுகிறது இந்தோனேசியா என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அரசு முறைப் பயணமாக இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோவிடோடோ டில்லிக்குச் சென்றுள்ளார். அவருக்கு ஜனாதிபதி மாளிகையில் பாரம்பரிய முறையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டு அவரை வரவேற்றார். இதனையடுத்துப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஜனாதிபதி ஜோகோ விடோடோ இருவரும்



சந்தித்துப் பேசினர். அதன் பின்னர் இருவரும் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்து அறிக்கை வெளியிட்டனர்.

இதன்போது, பிரதமர் மோடி பேசியவை வருமாறு:-

''இந்தோனேசியா இந்தியாவின் கிழக்குக் கொள்கையில் மிகவும் முக்கியமான நட்பு நாடாக உள்ளது. இரு நாடுகளும் பொருளாதாரம் மற்றும் அரசியல் நலன்களில் பெருமளவு பகிர்ந்து கொள்கிறது'' - என்றார்.

முன்னதாக கூட்டு அறிக்கையில் பாதுகாப்பு, தீவிரவாத ஒழிப்பு, குற்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளிடையேயான ஒத்துழைப்புத் தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை இந்தோனேசியா ஜோகோவிடோடோ சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது இரு நாட்டு உறவு மற்றும் பல்வேறு விவகாரங்கள் தொடர்பில் விவாதிக்கப்பட்டது. (எ)

## திருவண்ணாமலையில் சிறப்பாக நடைபெற்ற கார்த்திகை தீப விழா



திருவண்ணாமலை, டிசெ.14

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் கொட்டும் மழையிலும் கார்த்திகை தீபத் திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை கோலாகலமாக நடைபெற்றது.

அதிகாலை 3.50 மணிக்கு கோயில் மூலவர் சந்நிதியில் ஏற்றப்பட்ட பரணி தீபம், மாலை 6 மணிக்கு 2,668 அடி உயர மலை மீது ஏற்றப்பட்ட மகாதீபத்தை லட்சக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

அருணாசலேஸ்வரர் கோயிலில் நடைபெறும் பல்வேறு திருவிழாக்களில் முக்கியமானது கார்த்திகை தீபத்திருவிழா.

இந்தத் திருவிழா, ஒவ்வோர் ஆண்டும் 10 நாள்கள் கொண்டாடப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## 'வர்தா' புயலால் 11 பேர் பலி

சென்னை, டிசெ.14

'வர்தா' புயலுக்கு சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் 11 பேர் பலியாகி உள்ளனர். எதிர்பார்த்ததை விட அதிக பாதிப்பை ஏற்படுத்திய 'வர்தா' புயலுக்கு இதுவரை சென்னை, புறநகர்ப் பகுதிகளில் 11 பேர் பலியாகி உள்ளனர். அதே போல் வீடு இடிந்து விழுந்தும் மரங்கள் முறிந்து விழுந்தும் மின் கம்பங்கள் சரிந்ததிலும் மழை காரண மாக வாகனங்களில் சறுக்கி விழுந்ததிலும் சுமார் 40 பேர் காயம் அடைந்தனர். (எ)

# தமிழகத்துக்கு உதவத் தயார்

## மத்திய உள்துறை அமைச்சர் உறுதி



சென்னை, டிசெ.14

தமிழக அரசு எந்த உதவி கேட்டாலும் வழங்க மத்திய அரசு தயாராக உள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங், முதல்வர் பன்னீர் செல்வத்திடம் உறுதி அளித்தார்.

'வர்தா' புயல் பாதிப்புகள் தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் முதல்வரிடம் நேற்றுமுன்தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு 'வர்தா' புயல் நிலவரம் தொடர்பில் கேட்டறிந்தார். இதன் போதே அவர் இவ்வாறு உறுதியளித்தார்.

மேலும், தமிழக அரசு செய்துள்ள முன்னேற்பாடுகள், போர்க்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

இதேவேளை ''போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன'' என்று தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் உள்துறை அமைச்சரிடம் தெரிவித்துள்ளார். மேலும், சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைப் புரட்டிப் போட்ட 'வர்தா' புயலை எதிர்கொள்ளப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் -

புயலால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சீர்செய்ய தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ள அதிகாரிகள் தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## தேசிய கீதத்துக்கு மரியாதை செலுத்த மறுத்த 6 பேர் கைது

திருவனந்தபுரம், டிசெ.14

கேரள மாநிலத்தில் நடைபெற்றுவரும் உலகப்பட விழாவில் திரைப்படத்தைத் திரையிடுவதற்கு முன்னர் தேசியகீதம் இசைக்கப்பட்டபோது எழுந்துநின்று மரியாதை செலுத்த மறுத்த 6 பேரை பொலிஸார் கைது செய்தனர். உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி இந்தியாவில் உள்ள சினிமாத்திரையரங்குகளில் திரைப்படம் திரையிடுவதற்கு முன்னர் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்ற நடைமுறை தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையில், தொடர்ந்து நடைபெற்று வரும் திரைப்பட விழாவின்போது தேசிய கீதத்தை அவமதிப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் கைது செய்யும்படி கேரள மாநில பொலிஸ் அதிகாரி உத்தரவிட்டுள்ளார். (எ)

## அமெரிக்காவிடம் விமானங்களை ஈரான் கொள்வனவு

ஈரானின்தேசியவிமான சேவை அமெரிக்காவிடம் 80 போயிங் விமானங்களைக் கொள்வனவு செய்யவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

எதிர்வரும் 10 வருடங்களில் இந்த விமானங்கள் விநியோகிக்கப்படவுள்ள நிலையில், இதில் 50 போயிங் 737 ரக விமானங்கள் மற்றும் 30 போயிங் 777 ரக விமானங்கள் அடங்குகின்றன. 16.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இந்த விமானக் கொடுக்கல் வாங்கல்களுக்கு அமெரிக்க அரசின் அனுமதி கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. போயிங் விமானங்களை ஈரானுக்கு விற்பனை செய்வதற்காக யோசனையை கடந்த நவம்பர் மாதம் அமெரிக்க காங்கிரஸ் சபை நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

*பிரான்ஸ் - பிரிட்டன் எல்லையிலுள்ள முகாமிலிருந்து கடத்தப்பட்ட*

# சிரியாவின் அகதிக் குழந்தைகள் பாலியல் தொழிலுக்கு விற்பனை!

லண்டன், டிசெ.14

பிரான்ஸின்காலிஸ்அகதிகள் முகாமில் இருந்து பிரிட்டனுக்கு அழைத்துச் செல்லப்பட்ட குழந்தைகள், கடத்தல் காரர்களின் மூலம் பாலியல் தொழிலுக்கு விற்பனை செய்யப்படுகின்றனர் என்ற அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகிய இரு நாடுகளுக்கு இடையேயான எல்லைப் பகுதியில் அமைந்துள்ள காலிஸ் முகாமில் போதிய இடவசதி இல்லாத காரணத்தால்அங்குஅடைத்துவைக்கப்பட்டிருந்த சிரிய நாட்டு அகதிகளை பிரிட்டன் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்று பிரான்ஸ் வலியுறுத்தியுள்ளது. இதன் முடிவாக காலிஸ் முகாமில் இருந்து அந்த அகதிகள் அரச பாதுகாப்போடு பிரிட்டனுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதில் கடந்த ஒக்ரோபர் மாதம் 750 குழந்தைகள் பிரிட்டனுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்தநிலையில் பிரிட்டனில் தஞ்சம் அடைந்த குழந்தைகளில் பலர் காணாமற் போயுள்ளனர் என்று பிரான்ஸ்நாட்டைச் சேர்ந்த கவுன்சிலர்கள் சிலர் குற்றம் சாட்டியுள்ளனர்.

பிரிட்டனைச் சேர்ந்த கடத் தல்காரர்கள் இணையத்தளம் வாயிலாக அகதிகளுடன் தொடர்பு வைத்துக்கொண்டு அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கின்றனர்.

போரில் தொலைந்த உங்களின் குடும்பத்தினரைப் பற்றி எங்களுக்குத் தெரியும், அவர்களைப் பார்க்க வேண்டுமா? என்று கூறும் அவர்களின் வார்த்தைகளை நம்பி குழந்தைகளும் அவர்களிடம் சரணடைகின்றனர்.

இதனைப் பயன்படுத்திக் கொள்ளும் கடத் தல்காரர்கள், அந்தக் குழந்தைகளை பிரிட்டனில் உள்ள கடைகளில் அடிமைத் தொழிலாளர்களாகவும், பல குழந்தைகளை பாலியல் தொழிலுக்கும் உட்படுத்துகின்றனர் என்றும் தெரியவந்துள்ளது.

சமீபத்தில் காலிஸ் முகாமில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட 16 வயதுச் சிறுமி ஒருவர் பிரிட்டனில் பாலியல் தொழிலாளியாக இருந்தமை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தநிலையில் பிரிட்டனைச் சேர்ந்த 'எக்பற்' என்ற தொண்டு நிறுவனம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரவியல் தகவலில், 2015 ஆம் ஆண்டில் மட்டும் 513 குழந்தைகள் காணாமற் போயுள்ளனர். ஆனால் அவர்கள் அனைவரும் காணாமற் போனதற்கு கடத்தல்காரர்களே காரணம் என்று கூறிவிட இயலாது.

மாறாக பிரிட்டனில் வசித்து வரும் தங்கள் உறவினர்களிடம் சென்று அவர்கள் அடைக்கலம் அடைந்திருக்கலாம் என்று கூறியுள்ளது. இருப்பினும் குழந்தைகள் காணாமற் போயுள்ளமை அதிர்ச்சியான ஒரு விடயம் என்ற போதிலும் பிரிட்டன் பொலிஸார் இதுதொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுப்பார்கள் என்று தெரிவித்துள்ளது. (எ)

## விண்வெளியில் குப்பைகளை அகற்ற ஜப்பான் நடவடிக்கை

டோக்கியோ, டிசெ.14

விண்வெளியிலுள்ள குப்பைகளை அகற்ற மிகப் பெரிய மீன் வலையை விண்கலம் மூலம் ஜப்பான் விண்வெளிக்கு ஏவியுள்ளது.

ஜப்பானின் தெற்குப் பகுதியில் உள்ள டேனிகாஷிமா தீவில் இருந்து சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அந்த வலை விண்கலம் மூலம் ஏவப்பட்டுள்ளது.

அந்த விண்கலத்தில் உள்ள மிகப்பெரிய மீன் வலை மூலம் விண்வெளியில் பூமியைச்சுற்றி வரும் கைவிடப்பட்ட ஏவுகணைகள் உள்ளிட்ட தேவையற்ற பொருள்களை நீக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

1957 ஆம் ஆண்டு முதன்முதலாக சோவியத் ரஷ்யா ஸ்புட்னிக் என்ற ஏவுகணையை விண்வெளிக்கு ஏவியது.

அன்றுதொடக்கம் தற்போது வரை பல்வேறு நாடுகளும் விண்வெளிக்கு ஏவுகணைகளை ஏவி வருகின்றன.

அவற்றின் பயன்பாடு முடிந்து கைவிடப்பட்ட ஏவுகணைகள் முதல் பல்வேறு பொருள்களும் பூமியைச் சுற்றி வருகின்றன.

விண்வெளிக்குக் கொண்டு செல்லப்படும் வலை ஸ்டீல் மற்றும் அலுமினியத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.இந் தக் கருவியில் இருந்து வெளிவரும் மின்சாரத்தின் மூலம் பூமியைச் சுற்றி வரும் குப்பைகளின் இயக்கத்தை மெதுவாக்கி, அவற்றைக் கைப்பற்ற திட்டமிடப்பட்டுள்ளது. (எ)

## 'யுனிசெப்' நிறுவன நல்லெண்ண தூதராக நடிகை சோப்ரா

ஐக்கிய நாடுகள் சபையின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (யுனிசெப்) நல்லெண்ணத் தூதராக நடிகை பிரியங்கா சோப்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இரண்டாம் உலகப் போரின்போது அழிந்த நாடுகளில் உள்ள சிறார்களுக்கு உணவு மற்றும் சுகாதார வசதிகளை வழங்கும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் ஆரம்பிக்கப்பட்டது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரை தலைமையகமாகக் கொண்டு இயங்கி வரும் இந்த நிதியத்தின் உலகளாவிய நல்லெண்ணத் தூதராக பொலிவுட் நடிகை பிரியங்கா சோப்ரா தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். (எ)

## கத்தி உலக சாதனை படைத்த ஜேர்மன் கால்பந்தாட்ட பிரியர்

பெர்லின், டிசெ.14

ஜேர்மனின் தீவிர கால் பந்து விளையாட்டுப் பிரியரான கிறிஸ்டியன் கின்னர் சத்தமாகக் கத்தி கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.




யார் அதிக நேரம் 'கோல்' என்றவார்த்தையைக் கத்துகிறார்கள் என்ற போட்டியில், 43.56 நொடிகள் மூச்சு விடாமல் கத்திச் சாதனை படைத்துள்ளார் கின்னர்.

மூன்று பேர் பங்கேற்ற போட்டியில் கின்னர் இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.

கத்தும் போது 80 டெசிபிள் அல்லது அதற்கும் மேல் சத்தம் இருக்க வேண்டும் என்பது கின்னஸ் அமைப்பின் நிபந்தனை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## பறவைகள் போன்ற இறகுடைய உயிரினம்

பறவை போன்று இறகுகளைக்கொண்ட அரிய வகை உயிரினம் ஒன்று தாய்லாந்தின் பாலி கடல் பகுதியில் கடற்றொழில் அறிஞரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது எந்த இனத்தைச் சேர்ந்த உயிரினம் என்று அடையாளப்படுத்தப்படாத நிலையில், crinoid என்று அதிகாரபூர்வமாக அழைக்கப்படுகின்றது.

இதை பவளப் பாறைகள் வளரும் பகுதிகளில் காண்பது அசாதாரணமானது விடயம் அல்ல எனினும், அவை நீந்துவதைக் காண்பது என்பது மிகவும் ஒரு அரிதான விடயமாகும்.

அவை பாறைகள் அல்லது பவளங்களுடன் எப்போதும் இணைந்தே



காணப்படும். அரைவாசி பறவை மற்றும் அரைப் பகுதி மீன் வடிவமைப்பைக் கொண்ட ஒரு கடல் உயிரினமாக இது கருதப்படுகின்றது. (எ)

## வெடிகுண்டு மிரட்டல்; விமானம் தரையிறக்கம்

வொஷிங்டன், டிசெ.14

அமெரிக்காவில் இருந்து ஜேர்மனிக்கு 530 பேருடன் சென்றலுப்தான்ஸா விமானம் வெடி குண்டு மிரட்டலை அடுத்து நியூயோர்க் நகரில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

அமெரிக்காவின்ஹூஸ்டன் நகர விமான நிலையத்தில் இருந்து ஜேர்மனியின் பிராங்க்போர்ட் நகருக்குப் புறப்பட்டுச் சென்ற விமானம் நடுவானில் சுமார் ஆயிரம் மைல் தூரத்தைக் கடந்து சென்றபோது, லுப்தான்ஸா நிறுவனத்துக்கு வந்த ஒரு அழைப்பில் அந்த விமானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து விமானிக்கு வழங்கப்பட்ட அவசர தகவலை அடுத்து நியூயோர்க் நகரில் உள்ள ஜோன் எப்.கென்னடி விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

விமானத்தில் இருந்த 530 பேரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு, மோப்ப நாய்களின் உதவியுடன் வெடிகுண்டு நிபுணர்கள் சோதனை நடத்தினர் என்று முதல் கட்ட தகவல் வெளியாகியுள்ளது. (எ)

## பிரிட்டனில் முதன்முறையாக இடதுசாரி இயக்கத்துக்குத் தடை

லண்டன், டிசெ.14

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பிரிட்டனில் தீவிர இடதுசாரி இயக்கமான பிரிட்டிஷ் நவநாஜிக்கள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளது.

இது பிரிட்டன் அரசியல் வரலாற்றில் முதன்முறையாக இடதுசாரி இயக்கத்துக்கு விதிக்கப்பட்ட தடை என்று கூறப்படுகின்றது. இதுதொடர்பான யோசனை பிரிட்டன் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி, அந்தக் குழுவில் இணைந்து கொள்வதோ அல்லது ஆதரவு வழங்குவதோ முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டுள்ள அதேவேளை, அவ்வாறு செயற்படுவது பெரிய குற்றவியல் குற்றம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தீவிர வலதுசாரி நடவடிக்கையில் ஈடுபட்ட அமைப்பு ஒன்று பிரிட்டனில் தடை செய்யப்படுவது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பிரிட்டன் உள்துறை அமைச்சர் கருத்துத் தெரிவித்ததாவது:-

'நேஷன் ஆஷன்'என்ற இந்த அமைப்பு இன வெறித்தன்மையுடையது. அத்துடன், யூத எதிர்ப்புச் சிந்தனையைப் பின்பற்றுகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பிரிட்டனில் கடந்த ஜூன் மாதம் பிரிட்டன் தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கொலை செய்யப்பட்டமைக்கு, அந்த அமைப்பின் கிளை நிறுவனம் ஒன்று கொலையாளியை புகழ்ந்து பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# சகல சௌபாக்கியம் தரும் விநாயகர் விரதம்



## இன்று பிள்ளையார் கதை ஆரம்பம்

உலகெலாம்நிறைந்துவிளங் கும் எல்லாம் வல்ல பரம்பொருளான விநாயகப் பொருமானுக்குரிய [illegible]பெரு[illegible]கதை விரதம் இன்[illegible] ஆரம்பமாகின்றது.

விக்கினங்கள் தீர்க்கும் விநாயகர் விரதம் இன்று முதல் 21 நாள்களுக்கு அனுட்டிக்கப்படுகின்ற மகிமையும், மாண்பும், புனிதமும், புண்ணியமும் நிறைந்த நல்ல விரதமாகும்.


விநாயகப் பெருமானுடைய திருவருள்பெற இந்த விரதம் பேருதவி புரிகின்றது. கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரம் கழிந்த பின்நாளில் அனுட்டிக்கப்படும் பிள்ளையார் பெருங்கதைப் படிப்பு விரதமானது விநாயகர் கோயில்களில் மிகநேர்த்தியாகக் கடைப்பிடிக்கப்படுவதால் விரதம் இருப்போர் காலையில் எழுந்து புனித புண்ணிய நீராடி சந்தியா வந்தனம் முடித்து ஆலயக் குருக்களிடம் தர்ப்பையிலான பவித்திரத்தை வாங்கி அணிந்து கொண்டு 21 நாளும் விரதம் இருந்து கணபதியை நினைத்து கைதொழுது தொடங்கலாம்.

விநாயகப் பெருமானுடைய இந்தப் பெருங்கதைப் படிப்பு விரதமானது சைவசமயிகளுக்கு மிக முக்கியமான விரதம் என்று கருதப்படுகிறது. இவ்விரதத்தை முறையாக நாம் அனுட்டித்தோமாயின் புத்திரபாக்கியம், விவாகம், உத்தியோகம், குறையில்லாத முறையான நல்லவாழ்வு கிடைக்கும் என்பது ஐதீகம்.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல் பெருவாக்கும் பீடும் பெருக்கும் இந்த விநாயகர் விரதம் எமது பூலோக வாழ்கையில் சகல சௌபாக்கியங்களும் எல்லா ஐசுவரியங்களும் கிடைக்கச்செய்யும் என்பதால் இன்று முதல் கணபதியை கைதொழுது நோன்பு காத்து நற்கதி பெற எங்களை நாங்களே தாயார்படுத்திக் கொள்வோமாக.

''வேழமுகத்து விநாயகரைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்''

தெய்வத் தமிழ்ச் சுடர்
இராசையா ஸ்ரீதரன்



காரைநகர் இ.போ.சா. டிப்போவுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்த இ.போ.சவின் தலைவர் ரமால் சிறி வர்த்தன டிப்போ முகாமையாளர் எஸ். ஜெயராசாவால் வரவேற்கப்படுகிறார். டிப்போவின் குறைபாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக உறுதி அளித்த இ.போ.ச. தலைவர் அலுவலகக் கட்டடத்துக்கென 10 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். (ஐ-30)

# குமார் குணரட்னத்தின் குடியுரிமை பரிசீலனை

கொழும்பு.டிசெ.14

முன்னிலை சோசலிச கட்சியின் அரசியல்சபை உறுப்பினர் குமார் குணரத்னத்தின் குடியுரிமை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன் கட்டுப்பாட்டாளர் நிஹால் ரணசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய பிரஜையான குமார் குணரத்னம், இலங்கையின் குடிவரவுச் சட்டத்தை மீறி தங்கி இருந்தமைக்காக கைது செய்யப்பட்டு ஒருவருட சிறைவைப்பின் பின்னர் கடந்த 2ஆம்திகதி விடுவிக்கப்பட்டார்.

அத்துடன் 3 மாத காலத்துக்கு இலங்கையில் தங்கி இருக்கத் தற்காலிக வீசாவும் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது தமது ஆஸ்திரேலியக் குடியுரிமையை ரத்து செய்து, இலங்கைக் குடியுரிமையைப் பெற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாக, குமார் குணரத்னம் குடிவரவு குடியகல்வு திணைக்களத்திடம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அவரது குடிவரவு விண்ணப்பம் பரிசீலிக்கப்படுகிறது என்று குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.





வடமாகாண சிரேஷ்ட பள்ளிக் கல்வியிலாளர் ஒன்றியத்தின் அலுவலகத் திறப்பு விழா நிகழ்வு திங்கட்கிழமை ஒன்றியத்தின் தலைவர் ஒய்வு நிலைக் கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தலைமையில் கே.கே.எஸ்.வீதி யாழ்.இந்துக்கல்லூரி முன்பாக இடம்பெற்றது. வடமாகாண கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார், யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வடமாகாண கல்வி·அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், வடக்கு மாகாணக். கல்வி அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.அலுவலகத்தை வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்தறை அமைச்சர் த.குருகுலராஜா நாடா வெட்டித் திறந்து வைக்கிறார். (ஐ-54)

# மாணவர்களுக்கு உதவி

வடமராட்சி.டிசெ.14

வடமராட்சி மஹாத்மா காந்தி பொதுப்பணி மன்றம் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு உதவும் திட்டத்தின் கீழ் முரசுமோட்டை புனித அந்தோனியார் றோ.க. வித்தியாலயத்தை சேர்ந்த மாணவர்களுக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது.

வித்தியாலயத்தில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் வைத்துத் தெரிவுசெய்யப்பட்ட 10 மாணவர்களுக்குத் தலா 3ஆயிரம் ரூபா பெறுமதியான இக்கற்றல் உபகரணங்களை வடக்கு மாகாண கல்விஅமைச்சர் த.குருகுல ராஜா வழங்கினார்.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக வடமராட்சி மகாத்மா காந்தி பொதுப் பணிமன்றம் தொடர்ந்தும் உதவித் திட்டங்களை வழங்கும் எனஅம்மன்றத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ஐ-30)

# பாலா ஓர் ஆன்மீகவாதி...


(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

முற்போக்கும், முதிர்ச்சியும் பொதிந்த இத்தகைய ஆளுமையாளரையே நான் நேசித்தேன். என்னிடமிருந்த முதிர்ச்சியின்மை, முழுமையின்மை ஆகியவற்றைக் குறைநிரப்பவும், பாலாவின் பக்குவம் எனக்கு உதவியது. பின்னோக்கிப் பார்க்கும் போது இப்போது ஒன்றைக் காண்கின்றேன். எனது நுண்ணிய உள் உணர்வுகளையும் மனோ நிலையையும் பொருத்தமான வார்த்தைகளில் வடிக்க பாலா உதவினார் என்பேன். அவருடைய ஆழ்ந்த அறிவும், நேரடி அனுபவமும், உளப் பகுப்பாய்வுத் திறனறிவும் எனக்குள்ளே தடைகளால் அமுக்கப்பட்டு, வெளிப்படாதிருந்த உணர்வுகளைச் சீண்டி, அறிவு வடிவம் பெற உதவின. காலப்போக்கில், எனது வாழ்வில் முதற் தடவையாக, எனக்குள்ளே கரைந்து உறைந்திருந்த ஓர் இருண்ட பக்கத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டவும் சமூக வாழ்வில் முழு ஈடுபாட்டோடு, ஆழமாக ஈடுபடவும் என்னால் இயலுமாயிற்று. மொழியை நுட்பமாக வெளிப்படுத்தும் ஆற்றலையும் பெற்றேன். இதனால் எனது எழுத்து, எனது உரையாடல், எனது உறவாடும்திறன் ஆகியவற்றின் பரிமாணங்களை விரிவுபடுத்த முடிந்தது. இதன் காரணமாக பாலாவுடன் எனக்கு ஏற்பட்ட உறவு மேலும் ஆழம் அடைந்தது. எனக்குள் மகிழ்ச்சியையும், திருப்தியையும் ஏற்படுத்தியது. அவர் அருகே இருக்க வேண்டும் என்ற ஒன்றே தேவை போல இருந்தது. முன்பெல்லாம் அமைதியற்ற - திருப்தியற்ற - ஒருவராக இருந்தேன். முன்பொருகாலம், இந்த யதார்த்த உலகின் பண்புகளான பண ஆசை, பொருளாசை ஆகியவற்றில் ஊறிப்போயிருந் தேன். இப்போது இன்னொரு மனிதப் பிறவியுடன் நெருக்கமாக நீடித்த உறவு முதன்மை பெறத் தொடங்கியபோது, அவை எல்லாம் மங்கத் தொடங்கின. எங்கள் திருமணம் 1978 செப்ரெம்பர் முதலாம் திகதி இடம்பெற்றது. எளிமையான சிக்கலில்லாத ஐந்து நிமிடச் சடங்கு. தெற்கு இலண்டன் பிறிக்ஸ்டன் நகரத் திருமணப் பதிவாளர் பணிமனையில், அரச அதிகாரி ஒருவர் தலைமையில் நடந்த சடங்கு. இந்தச் சமூகக் கடப்பாடு கூட எண்ணியிருந்ததை விட ஒரு வாரம் பிந்தியே நடந்தது. திருமணம் செய்யத் தீர்மானித்து, மறுநாளே சம்பிரதாயங்களை நிறைவேற்றலாம் என்று முடிவு செய்த போது, இருபத்தி நான்கு மணி நேர கால அவகாசத்துக் கென குறித்த பணம் எம்மிடம் இல்லை. ஆனபடியால் செய்யக் கூடிய சிறந்த வழி, ஒரு வார அறிவித்தல் கொடுத்து, காத்திருப்பதுதான்.

நெருங்கிய நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் தவிர, வேறு எவருக்கும் நாம் எமது திருமணம் பற்றித் தெரிவிக்கவில்லை. என்னைப் பொறுத்த வரையில் திருமணம் என்பது நம் இருவருக்கும் இடையிலான தனிப்பட்ட ஒப்பந்தம். எப்படியாயினும் இரகசியம் எதுவும் நீண்டகாலம் தாக்குப்பிடிக்காத ஒரு சமூகத்தில், விசயம் வெளியே கசிய மாலையிலேயே கூட்டம் சேர்ந்தது. உறைப்பான ஆட்டிறைச்சிக் கறியோடு கலியாணச்சாப்பாடு. விஸ்கியும்தண்ணீராக ஓடியது. ஆட்டமும் குதிபோட்டது. என்னுடைய கலியாண ஆடை, ஒரு மண்ணிறக் கொட்றோய் பாவாடை, வண்ணச் சட்டை. சடங்குக்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்னதாக ஓடிப்போய் வாங்கியவை. எப்படியோ இந்தத் திருமணத்தில் எனது ஆன்ம பங்காளனுடன் இணைந்து கொள்ள நான் கொடுத்து வைத்தவள் என்ற திருப்தி. எமது உறவில் ஏற் படுத்திய தவிர்க்க முடியாத உரசல்களையும், இந்த உறவு தான் சுமுகப்படுத்தியிருக்க வேண்டும்.

பாலசிங்கத்தைத் திருமணம் செய்வது என்பது ஒன்று. ஒரு புரட்சிப் போராட்டத்தில் சம்பந்தப்படுவது என்பது வேறொன்று. திருமணத்தின் பின் எனது உள்நோக்கம் வேறொன்றாக இருந்திருந்தால்,பாலாவைத் திசை திருப்பி அவரை வேறொரு பக்கம் நான் கவர்ந்து சென்றிருக்கலாம். ஆனால், நன் அப்படிச் செய்யவில்லை. அரசியற் பாதையையும் தமிழ் மக்களின் போராட்ட ஈடுபாட்டையும் நான் தேர்ந்தெடுத்தமைக்கான காரணம் என்ன? எமது உறவின் தொடக்க நிலையில், காத்திரமான ஓர் உலகை உறுதிப்படுத்துவதில் அல்லது அதில் தளம்பாமல் இருப்பதில் பாலா உதவினார் என்பது உண்மையே. ஆனால், (பிசிறல் இல்லாமல் நிரந்தரமாகக் கருத்துக்களைப் பொறிக்கக் கூடிய வெறும் எழுது பலகையாக) ஆணி அடிக்கக் கூடிய வெறும் பசு மரமாக நான் இருந்தேன் என்பதை என்றுமே ஒப்புக்கொள்ளமாட்டேன்.

# 17 டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியாக தோல்வியை சந்திக்காத இந்திய அணி!



மும்பை, டிச.14

இந்திய அணி 2015 ஓகஸ்ட் மாதத்திலிருந்து மும்பை டெஸ்ட் வரை தொடர்ச்சியாக விளையாடிய 17 டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வி காணாமல் (13 வெற்றி, 4 சமநிலை) முந்தைய சாதனையை சமன் செய்துள்ளது.

கடந்த 1985 செப்டம்பர் மாதத்திலிருந்து 1987 மார்ச் வரை தொடர்ச்சியாக 17 டெஸ்ட் போட்டிகளில் தோல்வி காணாமல் (4 வெற்றி, 13 சமநிலை) சாதனை படைத்திருந்தது.

சென்னையில் நடைபெற உள்ள கடைசி டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றால், கோஹ்லி தலைமையிலான அணி இந்த சாதனையை தகர்த்து புதிய வரலாறு படைக்கும்.

தற்போது சொந்த மண்ணில் தென்னாரிக்கா, நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளையும், வெளிநாட்டு தொடர்களில் இலங்கை மற்றும் மேற்கு இந்திய தீவுகளை வீழ்த்தி முந்தைய சாதனையை சமன் செய்துள்ளது.

இங்கிலாந்து, ஆஸ்திரேலிய அணிகள் தொடர்ச்சியாக 9 டெஸ்ட் தொடர்களில் வென்று முதலிடம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு இந்தப் போட்டியில் அஷ்வின் 7ஆவது முறையாக ஒரு டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட் வீழ்த்தியுள்ளார்.

இந்திய பந்துவீச்சாளர்களில் அனில் கும்ப்ளே 8 முறை இந்த சாதனையை நிகழ்த்தி முதலிடத்தில் உள்ளார்.


சொந்த ஊரான சென்னையில் நடக்கும் 5 ஆவது டெஸ்டிலும் அஷ்வின் 10 விக்கெட் கைப்பற்றினால் கும்ப்ளே சாதனையை சமன் செய்யலாம்.

24 ஆவது முறையாக ஒரு இன்னிங்ஸில் 5 விக்கெட் வீழ்த்தும் சாதனையை நிகழ்த்திய அஷ்வின், முன்னாள் அணித்தலைவர் கபில் தேவை (23) முந்தியதுடன் இந்திய துடுப்பாட்ட வீரர்களில் 3 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

கும்ப்ளே (35), ஹர்பஜன் (25) முதல் 2 இடங்களில் உள்ளனர்.

அஷ்வின் 167 ஓட்டங்களுக்கு 12 விக்கெட் வீழ்த்தியது வாங்கடே மைதானத்தில் இந்திய பந்து வீச்சாளரின் சிறந்த செயற்பாடாக அமைந்தது. முன்னதாக, இங்கிலாந்தின் இயான் போதம் 1980 இல் 13 விக்கெட் கைப்பற்றி உள்ளார்.

## தென்னாபிரிக்க டெஸ்ட் அணியின் தலைவர் டி விலியர்ஸ் பதவி விலகினார்



கேப்டவுன், டிச.14

தென்னாபிரிக்க டெஸ்ட் அணியின் தலைவர் பதவியிலிருந்து டி விலியர்ஸ் விலகியுள்ளார்.

தென்னாபிரிக்காவின் நட்சத்திர வீரர் டி விலியர்ஸ் (வயது 32) அதிரடி ஆட்டத்துக்கு பெயர் பெற்றவர். இவர், ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணி தலைவராக இருந்தார். கடந்த ஜூன் மாதம் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் பங்கேற்றார். பின், காயம் காரணமாக ஓய்வில் இருந்தார்.

இவருக்குப்பதில் நியூஸிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் டுபிளசி தலைவராகப் பொறுப்பேற்றார். இந்த இரண்டு தொடரையும் வென்றும் காட்டினார்.

ஆஸ்திரேலிய அணியை அதன் சொந்த மண்ணிலேயே வீழ்த்தினார். இவரையே டெஸ்ட் அணிக்கு நிரந்தர தலைவராக நியமிக்கலாம் என கூறப்பட்டது.

இந்நிலையில், டெஸ்ட் தலைவர் பதவியிலிருந்து டி விலியர்ஸ் விலகுவதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து டி விலியர்ஸ் தெரிவித்தவை வருமாறு:-

டெஸ்ட் தலைவர் பதவியை எனக்கு அளித்ததை கௌரவமாக கருதினேன். எதிர்பாராதவிதமாக, நியூஸிலாந்து, ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் பங்கேற்க முடியவில்லை. எதிர்வரும் இலங்கை தொடரிலும் விளையாடுவது சந்தேகம்தான்.

ஆஸ்திரேலிய மண்ணில் எங்கள் வீரர்கள் சிறப்பாக செயற்பட்டனர். இந்த நிலையில், டு பிளசியை தலைவராக நியமிக்க அணி முடிவெடுத்துள்ளது. தனிப்பட்ட வீரரின் விருப்பத்தை விட அணியின் நலனே முக்கியம் என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தென்னாபிரிக்க கிரிக்கெட் தலைவர் லார்கட் தெரிவித்தவை வருமாறு:-

அணியின் செயற்பாடே முக்கியம் என உணர்ந்த டி விலியர்ஸ், டெஸ்ட் தலைவர் பதவியிலிருந்து விலகியுள்ளார். இவரின் முடிவை மதிக்கிறோம். இனி டுபிளசி டெஸ்ட் அணியை வழிநடத்துவார் என்று தெரிவித்துள்ளார்.

## இலங்கை அணியுடனான போட்டிகளுக்காக ஆஸி. அணிக்கு ஜஸ்டின் லாங்கர் பயிற்றுநர்



மெல்பேர்ன், டிச.14

இலங்கை அணியுடனான சர்வதேச இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகளுக்கான ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுநராக ஜஸ்டின் லாங்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரரான ஜஸ்டின் லாங்கர், மேற்கு ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுநராக பணியாற்றுகிறார்.

ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுநர் டெரன் லீமன் ஓய்வெடுத்துக் கொண்டபோது, ஏற்கெனவே தென்னாபிரிக்க, மேற்கிந்திய அணிகளுக்கு எதிரான முத்தரப்பு ஒருநாள் தொடரின்போது ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுநராக ஜஸ்டின் லாங்கர் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இலங்கை அணியுடனான இருபதுக்கு 20 போட்டிகளுக்கான ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுநராக ஜஸ்டின் லாங்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய, இலங்கை அணிகள் 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 தொடரில் மோதவுள்ளன.

முதலாவது போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி மெல்பேர்னில் நடைபெறவுள்ளது

## இங்கிலாந்து அணிக்கு தலைமை வகிக்க ஜோ ரூட் தயார்!

மும்பை, டிச.14

இங்கிலாந்து கிரிக்கட் அணிக்கு தலைமை வகிக்க, ஜோ ரூட் தயாராக இருக்கிறார் என்று அணித் தலைவர் அலஷ்டயர் குக் தெரிவித்துள்ளார்.

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி தோல்வி கண்டிருந்ததை அடுத்து ஊடகவியலாளர்களிடம் இதனைக் கூறியுள்ளார். எனினும் தான் பதவி விலகுவது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 3-0 என்ற கணக்கில் இங்கிலாந்து இழந்துள்ள நிலையில், அலஸ்டைர் குக்கின் தலைமைத்துவம் தொடர்பில் கேள்வி எழுந்திருந்தது.

இந்திய அணிக்கு எதிரான தொடருடன் அவர் பதவி விலகுவார் என்று ஏற்கனவே செய்திகள் வெளியாகி இருந்தன. எனினும் புதுவருடம் பிறக்கும் வரையில் தாம் இந்த விடயத்தில் எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்வதாய் இல்லை என்று குக் தெரிவித்துள்ளார்.

ஜோ ரூட் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தற்போதைய துணைத் தலைவராக செயற்படுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 4 ஆவது தடவையாக பெலென்டோ விருதை சுவீகரித்துக் கொண்டார்

# கிறிஸ்டியானோ ரொனால்டோ!



ஸ்பெயின், டிசெ.14

போர்த்துக்கல் மற்றும் ரியல் மெட்ரிட் அணிகளின் நட்சத்திர உதைபந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ இவ்வாண்டுக்கான பெலென்டோ விருதை வென்றுள்ளார்.

இவர் இந்த விருதை நான்காவது தடவையாக வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வருடாந்த பெலென்டோ விருது வழங்கும் விழா ஸ்பெயினின் மெட்ரிட் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

விருது வழங்கும் விழாவில் பலரது எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் வருடத்தின் திறமையான உதைபந்தாட்ட வீரருக்கான விருதினைப் போர்த்துக்கல் உதைபந்தாட்ட அணித் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ பெற்றுக் கொண்டார்.

அவர் இதற்கு முன்னர் 2008, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான 3 பெலென்டோ விருதுகளையும் பெற்றுள்ளார்.

நான்காவது முறையாகவும் இந்த விருதை வெல்ல வேண்டுமென்ற கனவு நனவாகியுள்ளமையை இட்டுத் தான் மிகுந்த மகிழ்ச்சியடைவதாக ரொனால்டோ தெரிவித்துள்ளார்.

போர்த்துக்கல் தேசிய அணி மற்றும் ரியல் மெட்ரிட் ஆகிய அணிகளில் அங்கத்தவர் என்ற ரீதியில் தாம் மிகுந்த மகிழ்ச்சியடைவதுடன் பெருமிதம் கொள்வதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்டியானோ ரொனால்டோ இவ்வாண்டில் நடைபெற்ற தேசிய மற்றும் கழக மட்டத்திலான 54 ஆவது உதைபந்தாட்ட போட்டிகளில் விளையாடி 51 கோல்களை போட்டுள்ளார்.

வருடத்தின் உதைபந்தாட்ட போட்டிகளில் வீரர்கள் வெளிப்படுத்திய திறமைகளின் அடிப்படையிலேயே பெலென்டோ விருது வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



## அண்டர்சனுக்கு கோஹ்லி பதிலடி

டில்லி, டிசெ.14

கோஹ்லியின் விளையாட்டு உத்திகளில் குறை இருக்கிறது என இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் கூறியிருந்தார்.

இதற்கு பதிலளிக்கையில் கோஹ்லி தெரிவித்தவை வருமாறு:-, மற்றவர்களின் உத்திகள் மற்றும் தவறுகள் குறித்து கேள்வியெழுப்ப நான் விரும்பவில்லை. அதை அவர்களே புரிந்து கொண்டு சரி செய்ய வேண்டும். மற்றவர்கள் குறைகூறுவதைப் போல் நானும் பதிலுக்கு குறை கூறவோ, குற்றம் சாட்டவோ விரும்பவில்லை.- என்று தெரிவித்துள்ளார்.

# சென்னை டெஸ்ட் போட்டி திட்டமிட்டபடி நடைபெறும்



சென்னை, டிசெ.14

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 5 ஆவது டெஸ்ட் போட்டி திட்டமிட்டபடி சென்னையில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 5 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் வருகிற 16 ஆம் திகதி தொடங்குகிறது.

இந்நிலையில், வர்தா புயல் நேற்று சென்னை நகரைத் துவம்சம் செய்து விட்டது. முக்கிய வீதிகளில் மரங்கள் விழுந்து கிடக்கின்றன. பலத்த மழை காரணமாக விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதன் காரணமாக 5ஆவது டெஸ்ட் போட்டி சென்னையில் இடம் பெறுமா? என்ற சந்தேகம் எழுந்தது.

ஆனால், டெஸ்ட் போட்டி திட்டமிட்டபடி சென்னையில் நடக்கும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக ஐ.பி.எல். தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்தவை வருமாறு:-

சென்னையில் 5 ஆவது டெஸ்ட் போட்டி இடம் பெறும். போட்டியை நடத்த தமிழ்நாடு விளையாட்டு நிர்வாகம் தயாராகவே உள்ளது. இப்போதைக்கு இதில் எந்த மாற்றமும் இல்லை.- என்று தெரிவித்துள்ளார்.

# மெஸ்ஸியின் உலகக் கிண்ண கனவு நனவாகுமா?

ஸ்பெயின், டிசெ.14

உதைபந்தாட்டத் தகுதி காண் போட்டிகளில் அர்ஜென்டினா அணி தொடர்ந்தும் தடுமாறி வருகிறது.

அர்ஜென்டினா அணி 11 போட்டிகளில் 4 வெற்றி 4 சமநிலை 3 தோல்வி பெற்று 16 புள்ளிகளுடன் 6 ஆம் இடத்தில் உள்ளது.

தென்னமெரிக்கா தகுதி சுற்றுப் போட்டிகளில் இருந்து 4 அணிகள் நேரடியாக உலகக் கிண்ணப் போட்டிகளுக்குத் தகுதி பெறும். 5 ஆவது அணி ஓசியானியா தகுதிச் சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெறும் அணியுடன் மோதி அப்போட்டியில் வெற்றி பெறின் உலகக் கிண்ணப் போட்டிகளுக்குள் நுழைய முடியும்.

தற்போதைய நிலைமையில் அர்ஜென்டினா அணி 6 ஆவது இடத்தில் இருக்கின்றது. எனவே, அர்ஜென்டினா அணியின் உலகக் கிண்ண தகுதி என்பது தற்போது வரையில் கேள்விக்குறியாகியுள்ளது. எனினும், இன்னும் 7போட்டிகள் மீதமுள்ள நிலையில் இனிவரும் போட்டிகளில் ஆர்ஜென்டினா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் உலகக் கிண்ண போட்டிகளுக்கு தகுதி பெறமுடியும்.

அர்ஜென்டினா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி 2018 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற முனைப்பிலேயே தனது ஓய்வை அறிவித்த பின்னரும் மீண்டும் அணியில் இணைந்து கொண்டார்.

இவ்வாறான நிலையில், அர்ஜென்டினா அணி தொடர் தோல்விகளை சந்தித்து வருவது ரசிகர்களின் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

# அனைத்துப் பட்டதாரிகளுக்கும் தொழில் தர அரசு இணக்கம்!

## வயதெல்லையும் 45 ஆக உயர்த்தப்பட்டது

கொழும்பு, டிசெ.14

நாட்டில் உள்ள அனைத்துப் பட்டதாரிகளுக்கும் தொழில் வாய்ப்பைப் பெற்றுத்தர அரசு இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

மேலும் அரச வேலை வாய்ப்பைக் கோரி பட்டதாரிகள் விண்ணப்பிப்பதற்கான வயதெல்லை 45 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்திருப்பதாக இந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்ட குழு இதற்கான அறிக்கையைச் சமர்ப்பித்திருப்பதாகவும் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கூறியுள்ளது.

இதற்கமைய அனைத்துமாகாணங்களிலும் காணப்படும் ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கான அதிகாரிகள் ஆகிய பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

இதனடிப்படையில், பிரதமர் அலுவலகம் ஊடாகவே நிதி அமைச்சுக்கு இதற்கான பத்திரங்கள் அனுப்பப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பிரதமரால் நியமிக்கப்பட்ட இந்தக் குழுவின் தலைவரான தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சின் திட்டச் செயலாளர் சாந்த பண்டாரவினால் இந்த தொழில்வாய்ப்புத் தொடர்பான விவரங்கள் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

## ஈழத்து எழுத்தாளர் முல்லைமணி காலமானார்



இலங்கையின் பிரபல தமிழ் எழுத்தாளரும் வரலாற்று ஆசிரியருமான முல்லைமணி என அழைக்கப்படும் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று மாலை காலமானார்.

முல்லைத்தீவு முள்ளியவளையைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர், வவுனியா பண்டாரிக்குளத்தில் இயற்கை எய்தியுள்ளார்.

இவர் எழுதிய 'பண்டாரவன்னியன்' என்ற நாடகம் உலகளவில் பிரபலம் பெற்றிருந்தது.

அத்துடன் 'வன்னியர் திலகம்', 'கமுகம் சோலை', 'அரசிகள் அழுவதில்லை' போன்ற பிரபலமான நாவல்களையும் இவர் எழுதியுள்ளார். பல வரலாற்றுக் கட்டுரைகளையும் இலக்கிய சிந்தனைகளையும்எழுதிய முல்லைமணி வேலுப்பிள்ளை சுப்பிரமணியம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

அத்துடன் எழுத்துலகப் பங்களிப்புக்காக அவருக்கு 2015 ஆம் ஆண்டுக்கான 'சாஹித்திய ரத்ன' விருது வழங்கி ஜனாதிபதி கௌரவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## மாணவியை காட்டுக்குள் அழைத்துச் சென்ற இளைஞன் ஒருவர் பொலிஸாரால் கைது!

வவுனியா–நெடுங்கேணியில் பாடசாலை மாணவியைக் காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்ற இளைஞன் ஒருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர். அவருடன் இரு மாணவிகளும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருபவை வருமாறு:-

வவுனியா வடக்கு நெடுங்கேணிசிவா நகரபகுதியிலுள்ள காட்டுப்பகுதி ஒன்றிற்கு அந்த மாணவியைவருமாறுஅழைத்த சந்தேக நபர் பேருந்து ஒன்றில் சென்று இறங்கி அங்கு நின்றார்.

அப்போது மாணவி தனது நண்பி ஒருவரையும் அழைத்துக்கொண்டு அங்கு சென்றபோது அவர் காட்டுக்குள் அழைத்துச் சென்றார்.

அப்பகுதியில் நின்ற பெண் ஒருவர் இதனை அவதானித்துவிட்டு நெடுங்கேணி பொலிஸாருக்குதகவல்தெரியப்படுத்னார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் குறித்த இளைஞனையும்இருமாணவிகளையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மாணவி தற்போது நடைபெற்று வருகின்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுபவர் என்றும் தெரிய வருகின்றது. (ம)

## கொடிகாமம் - தவசிக்குளத்தில் கசிப்பு காய்ச்சிய இருவர் கைது

### கசிப்பு, கோடா, பரல்கள் மீட்பு

கொடிகாமம், டிசெ.14

கொடிகாமம்தவசிகுளம்பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவரைக் கைது செய்துள்ள பொலிஸார்அவர்களிடம் இருந்து 15 லீற்றர் கசிப்பையும் 75 லீற்றர் கோடாவையும் கைப்பற்றினர்.

மேற்படி பிரதேசத்தில் மறைவிடம் ஒன்றில், அழுக்குகள் நிறைந்த நீர்நிலை ஒன்றுக்கு அருகில் சிலர் கசிப்பு காய்ச்சுகின்றனர் எனக் கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து இரகசியமான முறையில் அங்கு சென்ற பொலிஸார் இருவரைக்கைதுசெய்தனர்.

அவர்களிடம் இருந்த கசிப்பையும் கோடாவையும் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்திய பரல்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட இருவரும் இன்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் கூறினர்.

மேலும், அந்தப் பகுதியில் தொடர்ந்து கசிப்பு காய்ச்சப்படுவதாகத் தங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாக கூறிய பொலிஸார், தாம் அங்கு கண்காணிப்பு பணியை தீவிரப்படுத்தியுள்ளனர் எனவும் குறிப்பிட்டனர்.

கசிப்பு காய்ச்சும் ஏனையோர் விரைவில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார்கள் எனவும்பொலிஸார்தெரிவித்தனர். (ம-23)

### புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

'நல்லாட்சி' அரசுக்காக இணைந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாலும் உத்தேச புதிய அரசமைப்புத் தொடர்பாக ஒரே நிலைப்பாட்டுக்கு வரமுடியவில்லை. அவை முரண்பட்ட நிலைப்பாட்டிலேயே நிற்கின்றன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை, நாடாளுமன்றின் அதிகாரங்கள், மாகாண சபைகளின் செயற்பாடுகள், உள்ளூராட்சி அமைப்புக்களின் தேர்தல் முறைமைகள் போன்ற அடிப்படை விடயங்களில் கூட ஒரு தீர்க்கமான கொள்கை நிலைப்பாட்டை நல்லாட்சி அரசின் பங்காளிகள் எட்டவில்லை.

அவர்களுக்குள் இணக்கமில்லை. அதனால் ஏனைய கட்சிகளும் ஒரு முடிவுக்கு வராமல் குழம்பி நிற்கின்றன.

குழுக்களின் அறிக்கைகள் என்றபெயரில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் குறித்துத் தனது நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்கு ஜனவரி 5 ஆம் திகதி வரை நல்லாட்சி அரசின் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கால அவகாசம் கோரியுள்ளது.

அதன் பின்னர்தான் நிலைமை ஓரளவேனும் தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தை அறிவதற்காக அதனுடன் ஒரு தனியான சந்திப்புக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருக்கின்றார்.

இவ்வாறு ஒவ்வொரு கட்சியையும்தனித்தனியாகஅழைத்துப் பேசி அவற்றின் கருத்துக்களைக்கேட்டறிந்தாவது இணக்கத்தை ஏற்படுத்த முடியாதா என்றுஜனாதிபதிநப்பாசைப்படுகின்றார். - என்றார் தினேஷ் குணவர்த்தனா. (உ)

### கலாஓயாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாஓயவுக்கு அருகில் இடம்பெற்ற விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளவதற்காக மேற் படி கடற்படை அதிகாரியும் மேலும் சில கடற்படைச் சிப்பாய்களும் சென்றனர் என்றும் அவர்கள் கலாஓயாவில் நீராடினர் என்றும் கூறப்படுகின்றது.

இதன்போதே குறித்த கடற்படை அதிகாரி நீரில் மூழ்கி உயிரிழந்தார் எனவும் தொவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

### வெதுப்பக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு கொண்டுவரப்பட்டது.

சம்பவ இடத்திற்குசென்றஅவரும் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் வெதுப்பகத்தில் உற்பத்தி செய்யப்பட்டிருந்த அனைத்து உணவுப் பொருட்களையும் அழித்தனர்.

வெதுப்பகத்தை மூடுமாறு கூறிய அவர்கள் மறு அறிவித்தல் வரை அங்கு உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடவேண்டாம் என்று தெரிவித்தனர்.

இதேவேளை, தங்களுடன் தனிப்பட்டவிரோதமுடையசிலர் அந்த நாயைக் கொன்றுவிட்டு கிணற்றில் கொண்டுவந்து வீசியிருக்கலாம் என்று வெதுப்பக உரிமையாளர் தெரிவித்தார். (ம-40)

### கோப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கோப்பாய் பகுதியில் கஞ்சா புகைத்துவிட்டுவீதியால்செல்லும் மக்களுக்குஅசௌகரியங்களை ஏற்படுத்தும் இளைஞர் கோஷ்டி ஒன்று தொடர்பாக பொதுமக்கள் எங்களுக்கு தகவல் தந்தனர். அந்தக் கோஷ்டிவேறுபிரதேசங்களுக்கு சென்று மோதல்களில் ஈடுபடுகின்றனர் என்றும் எங்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் தொடர்பாக விசாரணைகளைமேற்கொண்டநாங்கள் சம்பவ தினம் அதிகாலை திடீர் சுற்றிவளைப்பு ஒன்றை நடத்தி அவர்களைக் கைது செய்தோம். கைது செய்தபோது அவர்களிடம் இருந்துகஞ்சாவும் மீட்கப்பட்டது.– என்றார்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து மூன்று பேரிடம் வாள்கள் இருந்தமைகண்டுபிடிக்கப்பட்டு அவை மீட்கப்பட்டன. மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம)

### அம்பாந்தோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் இதனைக் கூறினார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் ஒரு துறைமுக அதிகார சபை அல்ல. இங்கு போராட்டம் நடத்தும் ஊழியர்கள் உடனடியாக கடமைக்கு திரும்பவேண்டும். இல்லாவிட்டால் எதிர்வரும் ஓரிரு தினங்களில் நாம் முக்கியமான தீர்மானம் ஒன்றுக்கு வர வேண்டி இருக்கும்.

முக்கியமாக, கடமைக்குத் திரும்பாதுள்ள ஊழியர்களுக்குப் பதிலாக புதிய ஊழியர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார்.

மேற்படி அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்தில் கடந்த பலவருடங்களாக 483 ஊழியர்கள் தற்காலிக அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர். தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி இவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று 7 ஆவது நாளாகவும் இவர்களின் போராட்டம் தொடர்ந்தது.

இதேவேளை, தற்பொழுது துறைமுகத்தில் பணியாற்றும் அரைவாசிஊழியர்களைதுறைமுகத்தில் நிரந்த ஊழியர்களாக இணைத்துக் கொள்வதற்கும் ஏனையவர்களைசீனநிறுவனத்தில் இணைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் கூறியதை இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அனைவருக்கும் துறைமுகத்தில் நிரந்தர நியமனம் வழங்குமாறு அவர்கள் கோரி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

### அரசமைப்பை...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

உறுப்பினருமான உதய கம்மன்பில்ல இவ்வாறு தெரி வித்திருக்கின்றார்.

தமது கட்சியின் தலைமையகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த அவர், புதிய அரசமைப்பு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு பெறவிடாமல் தோற்கடிப்பதாயின் அதற்கு மொத்தம் 76 எம்.பிக்களின் ஒத்துழைப்புத் தங்களுக்குத் தேவைப்படுகின்றது என்று சுட்டிக்காட்டினார்.

ஏற்கனவே கூட்டு எதிரணியில் 51 எம்.பிக்கள் உள்ளனர். அரசுப் பக்கத்தில் உள்ள மேலும் 28 எம்.பிக்கள் தங்களுக்கு இவ்விடயத்தில் ஒத்துழைப்புத் தரத் தயாராக இருக்கின்றனர். புதிய அரசமைப்பைத் தோற்கடிக்க அவர்கள் முடிவு செய்துவிட்டனர்.

இந்த எண்ணிக்கை 28 இலிருந்து 35 ஆக உயரக் கூடிய வாய்ப்புகளும் உள்ளன. - என்றும் அவர் கூறினார். (உ)

### இந்த அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை பணியில் இருந்து நீக்கிவிட்டுபுதியவர்களைஉள்வாங்க நடவடிக்கைஎடுக்கப்படும்என்று துறைமுகங்கள், கப்பல்போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கருத்து வெளியிட்டுள்ள நிலையிலேயே, முன்னாள் ஜனாதிபதி நேற்று மாலை மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊடகவியலாளர் தாக்கப்பட்டமைக்கு அரசாங்கம் இன்னும் வாய்திறந்து மன்னிப்புக் கோரவில்லை என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

அரசாங்கம் மேலும், மேலும் அடக்குமுறையையே பிரயோகித்து வருகின்றது. இது கண்டிக்கத்தக்க ஒன்றாகும் எனவும் அவர் மேலும் கூறினார். (ம)

### மக்களின்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

திருகோணமலை மாவட்டத்தின் - நாவலடி பிரதான வீதி நேற்று செவ்வாய்க்கிழமை மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது. அந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இதுவரை காலமும் எந்தவொரு அரசமைப்பும் மக்களது சம்மதத்துடன் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தால் கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அரசமைப்பானது நாட்டின் சகல மக்களதும் அங்கீகாரத்துடன் கொண்டுவரப்பட வேண்டும்.

அத்துடன், நாட்டில் தற்போது நல்லிணக்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதனை குழப்புவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். அவற்றைத் தவிர்த்து செயற்பட வேண்டியமை அவசியம்.

இந்நாட்டில் வாழும் சகல மக்கள் மத்தியில் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்பட்டிருப்பதனைஅவதானிக்கக்கூடியதாக உள்ளது.பிரச்சினைகள்ஏற்படாமல் இருப்பதற்கு அனைவரும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். இந்தப் புதிய அரசமைப்பு உருவாகும் நேரத்தில் அதன் தாற்பரியத்தைப் புரிந்துகொண்டுஅனைவரும்பொறுப்புடன்நடந்துகொள்ளவேண்டும். - என்றார் அவர். (உ)

காலைக்கதிர்
Kalaikkathir

## வறட்சியால் பாதிப்பு அபாயம்

தென்பகுதியில் நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக எதிர்காலத்தில் நாட்டிற்குள் உணவுத்தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் நிலவுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் நீர் நிலை களின் நீர் மட்டம் 30 தொடக்கம் 35 வீதமாகவே காணப்படுகின் றது.

பராக்கிரம சமுத்திரம், இகினிமிடிய, தெதுறு ஓயா, லுணுகம் வெஹர மற்றும் மின்னேரியா ஆகிய நீர்த்தேக்கங்களில் 50 வீத நீர் மட்டமே காணப்படுகின்றது.

கவ்டுல்ல, கந்தளாய், ராஜங்கனை, பதவிய மற்றும் மஹகனதராவ ஆகிய குளங்களின் நீர் மட்டம் 30 தொடக்கம் 35 வீதமாக காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தரவுகள் குறிப்பிடுகின்றன.

நிலவும் நீர்த் தட்டுப்பாடு காரணமாக 40 விவசாயப் பண்ணைகளில் மாத்திரமே தற்போது பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

50 தொடக்கம் 60 வீதமே தற்போது பயிர்ச்செய்கையை முன்னெடுக்க முடியும் என நீர்ப்பாசனத்திணைக்களம் சுட்டிக் காட்டியது.

பெரும்போகத்தில் 8 லட்சம் ஏக்கரில் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் இம்முறை 2 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் காணியிலேயே அதனை முன்னெடுக்க முடிந்துள்ளதாக விவசாயத்திணைக் களம் குறிப்பிட்டது.

## விபத்தில் ஐவர் காயம்

வவுனியா இராசேந்திரன் குளப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் உட்பட ஐவர் காயமடைந்தனர்.

இவர்கள் சிசிக்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா செட்டிக்குளம் வீதியால் பயணித்த இரு மோட்டார் சைக்கிள்கள் இராசேந்திரன் குளம்பாடசாலைக்கு அருகாமையில்மோதிவிபத்துக்குள்ளாகின.

இதன்போது ஒரு மோட்டார் சைக்கிளில்பயணித்தகணவன், மனைவி மற்றும் இரு பிள்ளைகளும் மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அங்கு நின்ற முச்சக்கரவண்டியொன்றில் ஏற்றப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவம் தொடர்பாக நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-100)

*அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஊடகவியலாளர் மீதானதாக்குதல்:*

# குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால் பதவி விலகுவாராம் கடற்படைத் தளபதி

கொழும்பு, டிசெ.14

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இடம்பெற்றதாக தெரிவித்து நடத்தப்பட்டு வரும் விசாரணையில் தாம் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டால் தான் தனது பதவியிலிருந்தும் விலகத் தயார் என்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன தெரிவித்துள்ளார்.

தாம் ஓர் அரசியல்வாதி அல்ல என்று தெரிவித்துள்ள கடற்படைத் தளபதி, இலங்கைக்கு வருகின்ற கப்பல்களுக்கான பொறுப்புக்களை ஏற்பதற்கான கடப்பாடு தனக்கு இருப்பதாகவும் கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்தில் பணிபுரியும் 400க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கடந்த 7ஆம் திகதி முதல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தங்களை நிரந்தர ஊழியர்களாக நியமிக்கும் படியும், சீன முதலீடுகளை எதிர்த்தும் அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை போராட்டம் இடம்பெறும் பகுதிக்கு ஆயுதம் தரித்த கடற்படைச் சிப்பாய்களுடன் சிவில் உடையில் வந்த கடற்படைத் தளபதி, அங்குள்ள ஊழியர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதோடு ஊடகவியலாளர்கள் மீதும் தாக்குதல் நடத்திய காணொளி வெளியாகியமையை அடுத்து பெரும் விமர்சனங்கள் எழுந்தவண்ணம் உள்ளன.



எனினும் இது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்திருந்தார்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து அம்பாறை மற்றும் தென்னிலங்கைப் பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதோடு கொழும்பிலும் ஊடக அமைப்புக்கள் இணைந்து போராட்டமொன்றை நடத்தத் தயாராகி வருகின்றன.

இந்த நிலையில் ஊடகங்கள் வெளியிடாத சில காணொளிகள் தன்னிடம் இருப்பதாகவும், விசாரணைகளின் போது அவற்றைச் சமர்பிக்கவிருப்பதாகவும் கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

'அம்பாந்தோட்டையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கப்பல்களை விடுவிக்குமாறு பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவருகின்ற ஊழியர்களுக்கு ஏற்கனவே ஓர் அறிவித்தல் வழங்கப்பட்டது. எனினும் அந்த அறிவிப்பை அவர்கள் புறக்கணித்தனர். கப்பல்களை விடுவித்தால் தற்கொலை செய்துகொள்ளப் போகிறார்கள் என ஊழியர்கள் கூறியதாக ஊடகங்கள் மூலமாக அறிந்து கொண்டேன். அதனையடுத்தே குறித்த பகுதிக்குக்கடற்படை சென்றது. அந்த இடத்தில் எனக்கு அரசியல் இருக்கவில்லை. நான் கட்டளைகளைப் பின்பற்றுபவன். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் எஸ்.பி.எஸ்.ஐ. உருவாக்கியதோடு முன்னைய ஆட்சியில் யுத்தத்தை வெல்வதற்கும் பங்களிப்புச் செய்தேன். இப்போது உள்ளது புதிய அரசாங்கம். தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் ஊடகவியலாளர் வழக்குத் தொடர்ந்தால் அதனை எதிர்கொள்ளவும் நான் தயார். ஊடகங்களில் வெளியான காணொளிகளை விடவும் என் சார்பான காணொளிகள் என்னிடம் உள்ளன. ஊடகங்கள் வெளியிடுகின்ற காணொளிகளுக்கு உடனடிப் பதில் வழங்க'எனக்கு அவசரம் இல்லை. புதன்கிழமை முதல் விசாரணை நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த விசாரணைகளில் நான் சாட்சியமளிப்பேன்' - என்று கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி நாளை மலேசியாவுக்கு விஜயம்

மலேசிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்புக்கமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை வியாழக்கிழமை பிற்பகல் மலேசியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். சனிக்கிழமை வரை அவர் அங்கு தங்கியிருப்பார்.

இலங்கை, மலேசிய நாடுகளுக்கிடையிலான தூதரகத் தொடர்புகள் ஆரம்பிக்கப்பட்டு அறுபது ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு இடம்பெறும் நிகழ்வு, கலாசார நிகழ்வுகள் மற்றும் உணவுக் கண்காட்சி போன்றவற்றிலும் ஜனாதிபதி பங்குபற்றுவார்.

இந்த சுற்றுப்பயணத்தின் போது இருநாடுகளுக்கும் முக்கியத்துவம் மிக்க புதிய வர்த்தக முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்தும் இருதரப்பு உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படவுள்ளன. இந்த உத்தியோகபூர்வ விஜயத்தில் இரு நாடுகளுக்கு மிடையிலான உறவுகளை விருத்தி செய்யும் நோக்குடன் மலேசிய மன்னர் மற்றும் பிரதமர் ஆகியோரையும் ஜனாதிபதி அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நபர்களாகவோ தனி அமைப்புகளாகவோ நின்று எதிர்கொள்வதைவிட, அனைவரும் ஒரு கொள்கையின் கீழ் ஒன்றிணைந்து எதிர்கொள்வதே பொருத்தமானதாகவும் வலுவானதாகவும் இருக்கும் என்றும் தமிழ் மக்கள் பேரவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழ் மக்கள் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழ் மக்களின் நீதிக்கான பயணத்தின், மிகமுக்கியமான காலகட்டமொன்றில் இன்று நாம் நிற்கின்றோம். நீண்ட காலத் திட்டமிடலுடன், காலம் காலமாக எமக்கெதிராக மேற்கொள்ளப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட அநீதிகளை எதிர்கொள்ள, எம்மிடமும் நீண்டகால நோக்குடன் கூடிய, முறையாகத் திட்டமிடப்பட்ட, இனத்தின் நலனை மட்டும் முன்னிலைப்படுத்திய, ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறை இருத்தல் வேண்டும்.

இத்தகைய ஓர் எண்ணக்கரு வுடனேயே தமிழ்மக்கள் பேரவை கடந்த வருடம் உருப்பெற்றிருந்தது. எமது மக்களையும் பெரும்பாலான அமைப்புகளையும், இனத்தின் நன்மை எனும் பொதுநோக்கின் கீழ் ஒன்று திரட்டி, கடந்த ஒருவருட காலத்துக்குள் குறிப்பிடத்தக்க அளவுக்கு செயற்படவும் எம் மால் முடிந்துள்ளது.

தொடரும் எமது இச்செயற் பாடுகளோடு எம் தேசத்தின் பிரிக்க முடியாத ஓர் அங்கமாகிய எம்புலம்பெயர் அமைப்புகளையும் எம்முடன் கைகோத்து செயற்பட முன்வருமாறு உரிமையுடன் நாம் கேட்டுக்கொள்கிறோம்.

எம்மிடையேயான வேறுபாடுகள் அனைத்தையும் எமக்காக செய்யப்பட்ட அர்ப்பணிப்புகளின் பெயரால் களைந்து, ஒன்றிணைந்த செயற்பாட்டுக்கு தமிழ் மக்கள் பேரவையுடன் கைகோக்குமாறு இனம்சார் செயற்பாடுகளில் ஈடுபடும் புலம்பெயர் அமைப்புகளை வேண்டி நிற்கின்றோம்.

தோழமையுணர்வுடன் எம்முடன் இணைந்து பயணிக்க விரும்பும் புலம்பெயர் அமைப்புகளை, எமது இணையத் தளத்தின் தொடர்பாடல் பகுதியினூடாகவோ அல்லது எமது உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரியினூடாகவோ எம்மைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளும் அமைப்புகள், தங்கள் செயற்பாடுகள், வேலைத்திட்டங்கள், நோக்கு என்பவை அடங்கிய சிறு குறிப்பொன்றையும் எமது தொடர்பு முகவரிக்கு அனுப்பிவைப்பதன் மூலம் உங்களுடனான புரிதலை இலகுவாக்க எமக்கு உதவமுடியும்.

தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத் தொடர்களில் இது தொடர்பான கலந்துரையாடலின் பின்னர், நாம் இணைந்து செயற்படகூடியவகையில் உங்களை , நாம் தொடர்புகொள்வோம்.

இனம் சார்ந்த இணைந்த செயற்பாட்டுக்காக, நீங்கள் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களை எம்முடன் நேரடியாக பகிர்ந்து கொள்ள விரும்புபவர்களும் எமது தொடர்பாடல் பகுதியினூடு எம்மை தொடர்பு கொள்ளவும். – என்று தொவிக்கப்பட்டுள்ளது. (ம)

சுந்தர்சன்
நிறுவனத்தின்
10.12.2016 தொடக்கம் 17.12.2016 வரை
மாபெரும்
மலிவு விற்பனை
இத்தினங்களில் ரூபா 10,000 இற்கு மேல் கொள்வனவு செய்யும்
அதிஷ்டசாலி வாடிக்கையாளர்கள் 40 பேருக்கு
பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்
1st Prize - Sofa Set
2nd Prize - Washing Machine
3rd Prize - LED T.V.

138, யாழ் வீதி,
மானிப்பாய்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.